கேலக்ஸியின்

# விண்மீன்

மின்னிதழ்

இதழ் - 6

நவம்பர் - 2025

## 'தெரியாத விசயத்தை எழுதுவதில்லை'
## - எழுத்தாளர் வா.மு. கோமு











## மதுரையில் கேலக்ஸி வாசகர் வட்ட புத்தக வெளியீட்டு விழா

SBN 978-81-994858-3-9

www.galaxybs.com

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

**பதிப்பாளர்**
பாலாஜி பாஸ்கரன்

**ஆசிரியர்**
பரிவை சே குமார்

**இணை ஆசிரியர்**
தேவதர்சினி நடராஜன்

**வடிவமைப்பு**
சென் பாலன்

**Published by**
Galaxy Book Sellers & Publishers

**Print Partners**
Printech, UAE

**Travel Partner**
FJ Tours & Travels, UAE

**Galaxy Book sellers & Publishers**
www.galaxybs.com
+91 99944 34432

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

ISBN 978-81-994858-3-9
9 788199 485839

# ‘கண்’காட்சி

மக்களிடம் புத்தகங்களைப் பரவலாகக் கொண்டு சேர்க்கும் செயலைச் செய்வதில் புத்தகக் கண்காட்சிக்கு முக்கியமான இடம் உண்டு. முன்பெல்லாம் புத்தகக் கண்காட்சி என்பது ஏதோ ஒரு சில இடங்களில் மட்டுமே நடத்தப்படும். குறிப்பாக சென்னையில் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சிக்கு தென் மாவட்டங்களில் இருந்தெல்லாம் வந்து செல்வது என்பது முடியாத காரியம். அப்போது தென் மாவட்டங்களில் எல்லாம் புத்தகக் கண்காட்சி என்பது அரிதான விசயம்தான்.

இப்போது வருடத்தின் பாதி மாதங்கள் பல ஊர்களில் தொடர்ந்து புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது. பதிப்பாள நண்பர்களிடம் எப்படிப் போகிறது எனக் கேட்பதுண்டு. குறிப்பாக கடந்த மூன்று வருடங்களில் பெரும்பாலான இடங்களில் எதிர்பார்த்த அளவு விற்பனை இல்லை என்பதுதான் உண்மை என்றாலும் நிகழ்வு முடிந்த பின் கோடிகளில் விற்கப்பட்டன என்ற செய்தி எல்லாப் பத்திரிக்கைகளையும் அலங்கரிக்கும். இந்தக் கோடிகள் புத்தகங்களைச் சுமந்து ஊர் ஊராய் போகும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே வெளிச்சம்.

தற்போது வாசிப்பு என்பது பிடிஎப் மற்றும் இணைய வழியாகவும், ஒலி வடிவில் கதைகளை - புத்தகத்தை அப்படியே வாசிப்பது - பலர் சொல்வதைக் கேட்பதாகவும்தான் இருக்கிறது.

சரி விஷயத்துக்கு வருவோம், உள்ளூர் புத்தகக் கண்காட்சிகளிலேயே விற்பனை என்பது சொல்லிக் கொள்ளும்படி இல்லை என்ற நிலையில் வெளிநாடுகளில் நடக்கும் புத்தக விழாக்களில் எப்படி இருக்கும்..? வெளிநாடுகளில் இருக்கும் ஆட்களுக்கு கண்காட்சிக்குச் செல்ல, புத்தகங்களை வாங்கி வாசிக்க இங்கு நேரம் இருக்குமா..? என்பதையெல்லாம் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

சென்ற வாரத்தில் ஷார்ஜா பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. 1982-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தப் புத்தகக் கண்காட்சி இப்போது உலகின் மிகப்பெரிய புத்தகக் கண்காட்சிகளில் ஒன்றாக உயர்ந்திருக்கிறது. இதில் பல நாட்டுப் பதிப்பகங்கள் கலந்து கொள்கின்றன. ஒரு புத்தகக் கண்காட்சி நிகழ்வை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு இது மிகச் சிறந்த உதாரணம். பல புத்தக வெளியீடுகள் நடக்கின்றன. எல்லாவற்றுக்கும் அரைமணி நேரம்தான் ஒதுக்கீடு, நேர மேலாண்மையை அவ்வளவு சிறப்பாக கடை பிடிப்பார்கள். நம்ம ஊரைப் போல் ஐயா வந்திருக்காங்க பேசட்டும் என்பதெல்லாம் இல்லை. எவ்வளவு பெரிய மனிதர் என்றாலும் கொடுத்த நேரத்தில் முடித்து அடுத்த நிகழ்வுக்கு அரங்கைக் கொடுத்தே ஆக வேண்டும்.

இங்கு சமீப வருடங்களாய்த்தான் தமிழ்ப் பதிப்பகங்கள் கலந்து கொள்கின்றன. அதிலும் சென்ற வருடம் வந்ததில் பாதி கூட இந்த வருடம் இல்லை என்பதுதான் வேதனையான உண்மை. மலையாள பதிப்பகங்கள்தான் அதிக இடங்களை ஆக்கிரமித்து இருக்கும். அவர்கள் குடும்பமாய் வருகிறார்கள். மொத்தமாகப் புத்தகங்களை அள்ளிச் செல்கிறார்கள் என்பதுதான் இதற்கு முக்கியக் காரணம்.

இந்த வருடம் நாங்கள் சென்ற விடுமுறை நாளில் தமிழ்ப் பதிப்பக அரங்குகள் காற்றாடின. பெரும்பாலும் ஆட்கள் வருவது என்பது அரிதாகிவிட்டது. கிடைக்கும் விடுமுறைநாளில் இந்த போக்குவரத்து நெரிசலில் போய் வர வேண்டுமா என்ற எண்ணம் ஒரு பக்கம் இருந்தாலும் நம் அரங்கில் விற்க்கப்படும் புத்தகங்களின் விலையும் வாங்க யோசிக்க வைக்கிறது என்பதே முக்கியமான காரணி. மலையாளிகள் சற்று குறைத்தே கொடுக்கிறார்கள் என்பதுடன் அவர்களின் அரங்குகளில் எழுத்தாளர்கள் தங்கள் புத்தகங்களைக் கையில் வைத்துக் கொண்டு வருவோரிடமெல்லாம் பேசி எப்படியும் விற்று விடுகிறார்கள். தமிழரையும் மலையாளப் புத்தகங்களை வாங்க வைத்து விடுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஒரு பதிப்பகத்தாரிடம் விலை அதிகமா இருக்கே என்று கேட்டபோது அவர் சொன்ன விசயங்கள் அந்த விலை நியாயமானதே என எண்ண வைத்தது என்றாலும் தங்களுக்கு அரசு உதவவில்லை, அப்படியே உதவினாலும் நாங்கள் செலவழித்துச் சென்ற பின்னரே கொடுப்பார்கள் என்றார். கொடுக்கிறார்கள்தானே... அப்ப நீங்க கொஞ்சம் விலையைக் குறைத்து வைக்கலாமே என்ற கேள்விக்குப் பதில் இல்லை. நூறு ரூபாய் புத்தகம் பத்து திர்ஹாம் ( ஒரு திர்ஹாம் இந்திய மதிப்பில் 24 ரூபாய்) என்பது ஏற்புடையதே. ஆனால் 800 ரூபாய் புத்தகத்துக்கு 90 திர்ஹாம் என்பதெல்லாம் ரொம்ப அதிகமே.

மேலும் நமது எழுத்தாளர்கள் மலையாளிகளைப் போல அரங்கில் நின்று விற்பனை செய்ய நினைப்பதில்லை. எனது புத்தகம் இங்க இருக்கு பார்த்தியா..? எனப் புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து விருப்பக்குறி வாங்குவதையே விரும்புகிறார்கள். இந்தமுறை டிஸ்கவரி அரங்கில் பெண் எழுத்தாளர்கள் இருவர் நின்று விற்பனைக்கு உதவியதைப் பார்த்தபோது மகிழ்வாக இருந்தது.

இனி வரும் காலங்களில் பதிப்பகங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, மலையாளிகளைப் போல புத்தக விலையை ஒரளவு குறைத்தால், புத்தகத்தை வாங்குவோரின் எண்ணிக்கையும் கண்டிப்பாக உயருமென நினைக்கிறேன்.

நடக்குமா..?

பரிவை சே குமார்

# இதழில்....

**சிறுகதை**

நானும் எனது எஜமானியம்மாவும் - கீதா, பெங்களூர்

எதிர்பாராதது - பாத்திமா ஹம்தா

**நேர்காணல்:**

‘தெரியாத விசயத்தை எழுதுவதில்லை’ எழுத்தாளர் வா.மு. கோமு –பரிவை சே.குமார்.

**கட்டுரை:**

பகுதி – 5 : நிஸ்வாவின் நிழலில் –காலத்தைக் கடந்து!!! - இளங்கோ ராமசாமி

செல்லங்களும் செல்களும் - மோகன் ஜி

**புத்தகப் பார்வை** :

'சிலிர்ப்பு' (தி. ஜானகிராமன்) - ஒரு பார்வை - பாலமுருகன். லோ

சுந்தர பவனம் - அ. கௌரி சங்கர்

மகத்தான வாழ்வுக்கு மருத்துவக் குறிப்புகள் - விஜி ரவி

**ஒரு பக்கக் கதை:**

தர்மம் - ஆர்.வி.சரவணன்

பாதுகாப்பு – மலர்மதி

விமானப் பயணம் - சுஶ்ரீ

**கவிதை**

எழுதலே வாழ்தல்..! – தமிழ்க்காதலன்

**கேலக்ஸி நிகழ்வு:**

ஏழு நூல்கள்… நிறைவான விழா… – அன்புச்செழியன்

**சினிமா:**

தண்டகாரண்யம் - பரிவை சே.குமார்

# நானும் எனது எஜமானியம்மாவும்

கீதா, பெங்களூர்

எனக்கு 62 வயது ஆகின்றதாம். பேசிக் கொண்டிருக்கின்றார்கள். 62 வயது ஆகிடுச்சா எனக்கு, அதுக்குள்ள?

சமீபகாலமாக வராதவவங்க எல்லாம் வந்திருந்தாங்க. எல்லாம் எஜமானி அம்மாவின் சந்ததிங்கதான்.

என்னென்னவோ நினைவுகள் வரிசைகட்டி வருது. என் எஜமானியம்மாவும் அவங்க கணவர் ஐயாவும் அப்ப சின்னவங்க. என்னை எஜமானியம்மாவோட அப்பாதான் பாத்து பாத்து செதுக்கினாரு.

அவங்க மூத்த மகள் கல்யாணம் இப்பதான் நடந்தது போல் இருக்கு. கொள்ளுப் பேரனே பொறந்தாச்சு. பெரிசா பந்தல் போட்டு அமர்க்களமா நடந்துச்சு. இப்பலாம் அப்படி நடக்குமா?

அதுக்குப் பிறகும் நல்ல நிகழ்வுகள் பல, துக்கம் சில நடந்திருந்தாலும், எனக்குப் பல நல்லதுதான் நினைவுக்கு வருது. அப்படி ஒரு நல்ல அதிர்வு எனக்குக் கிடைச்சிருந்துச்சு.
எஜமானியம்மா, ஐயாவோட மகளுங்க, மகனுங்க கல்யாணம், புதுவரவுங்க, சீமந்தம், குழந்தைங்க, அதுங்க பிறந்தநாள் அது இதுன்னு எப்பவும் ஏதாச்சும் நடக்கும். நானும் குஷியா இருப்பேன், இளமையா பொலிவோடு.

ஒவ்வொரு பண்டிகைக்கும், வெளியூர்ல இருந்த பசங்க, குழந்தைங்க குடும்பத்தோட வந்துடுவாங்க. வீட்டுல இருக்கறவங்களும் எல்லாரும் சேர்ந்துதான் தீபாவளி, பொங்கல்னு கொண்டாடுவாங்க. நான் அமர்க்களமா இருப்பேன். அப்பப்ப எனக்கும் பூசிவிடுவாங்கல்லா!

பண்டிகை மட்டுமா? கோடை விடுமுறையிலயும் வெளியூர்க் குழந்தைங்க வந்துடும். இங்க இருக்க குழந்தைங்க, உள்ளூர் மகன் மக, குழந்தைகளும் சேர்ந்துக்கும்.

என்னைச் சுத்தி மாமரம், வேப்பமரம், தென்னை மரம், கொய்யா, சப்போட்டா, மாதுளை, வாழை, நெல்லி, அடுக்கு மல்லி, மல்லி, கனகாம்பரம், செம்பருத்தி, மஞ்சள், இஞ்சி, கறிவேப்பிலை, எலுமிச்சை, பவழமல்லி, தித்திப்பூ, பன்னீர்பூ, மருதாணி... கிணத்துல வத்தாத தண்ணி, இப்பவும் கூட கிணறு தண்ணி இருக்கு... சேந்துவார்தான் இல்லை. போதுமா? பொறாமையா இருக்கா? இப்படித்தான் என் மேல திருஷ்டி விழுந்து போச்சு.

குழந்தைங்க என்னைத் சுத்தி, தோட்டத்தைச் சுத்தி ஓடியாடி விளையாடும். கிணத்தை ஆச்சரியமா எட்டிப்பாக்கும்.
மரங்கள்ல ஏறி விளையாடும். ஜூஸ் எல்லாம் எடுத்துக் குடிச்சுட்டு பாட்டில்ல தண்ணிய ரொப்பி வைச்சுடும். ஓடி ஒளிஞ்சு விளையாடறோம்னு தலையணைகள், மெத்தைகள், போர்வைகள் எல்லாம் கலைச்சு விடறதும், வாசல்ல இலைகள், மண், தீப்பெட்டி, விளையாட்டுச் சாமான் எல்லாம் பரப்பி அதகளப்படும். தாத்தாவுடன் சீட்டு விளையாட்டும், கேரம் போர்டும் கூச்சலும் கும்மாளுமுமா இருக்கும்.

அதுங்களோட, சேட்டைகளைப் பெரியவங்க சமாளிக்கறதும், கண்டிக்கறதும், சிரிப்பும், கும்மாளமும்னு பொழுது போறதே தெரியாது. எப்பவும் கலகலப்பாவே இருக்கும். எனக்கும் மிகவும் மகிழ்வாக இருக்கும். குழந்தைகள் அனைவரும் ஒரே குடும்பம் போலத்தான் இருந்தார்கள். எல்லோரும் கிளம்பியதும் எனக்கும் வெறிச்சென்று இருக்கும். களை இழப்பேன்.

எல்லா குடும்பங்களிலும் இருப்பது போல, மாமியார், மருமகள்கள், மகன்கள் குடும்பத்திற்கிடையில் சின்னச் சின்ன சண்டை உண்டுதான். யார் வீட்டிலதான் இல்லை சொல்லுங்க?
அவ்வப்போது ஏதாச்சும் வந்தாலும் எல்லோரும் பிள்ளைங்களால சந்தோஷமாதான் இருந்தாங்க. வருவோரும், போவோரும்ன்னு.

நவராத்திரி கொலுவே திருவிழா போல நடக்கும். பெரிய கோலம் போட்டு, பொங்கல்னா கலர் கோலம் எல்லாம் போடுவாங்க. நான் ஜொலிப்பேன். அலங்காரத்துடன் மிக அழகாக இருப்பேன். எல்லோரும் என்னை அப்படி ரசிப்பார்கள். வாஞ்சையுடன் இருப்பார்கள். இப்படி இருந்தால் கண் பட்டுவிடும் போல. அவங்களுக்குள்ள சுத்திப் போட்டுக்குவாங்க. எனக்கும் சுத்திப் போட்டிருக்கலாம்ல?

குழந்தைகளும் வளர்ந்தாங்க. பெரிய வகுப்புகளுக்குப் போனாங்க. படிப்பு அது இதுன்னு, மகன்களும் வேலை மாறி, ஊர் மாறி, பதவி அது இதுன்னு கூடுவது குறைஞ்சுச்சு. ஆனாலும் பெரிசா குழப்பங்கள் ஏதும் இல்லாம்தான் இருந்துச்சு.

தனித்தனிக் குடும்பங்களா இருந்ததாலயோ என்னமோ, எல்லாரோட சிந்தனைகளும், பழக்கவழக்கங்களும், அவங்கவங்க இருந்த ஊரு அனுபவம்னுட்டு சூழலுக்கு ஏற்ப மாறிப் போச்சு. குழந்தைகளும் வளர வளர மாறிடிச்சுங்க.

வருஷம் போகப் போக வீட்டு நிகழ்வுகள்ல பெரியவங்களுக்குள்ள மனஸ்தாபங்கள் வரத் தொடங்கிருச்சு. 4, 5 வருஷம் இருக்கும்....எஜமானியம்மாவோட ஒரு மகன் திடீர்னு போய்ட்டாரு. மெதுவா பிரச்சனைகள் தலை தூக்கிச்சு. அப்பதான் எனக்குத் தெரிஞ்சுச்சு, இவங்க மனசுல இத்தனை வருஷம் எரிமலை போல இருந்த எண்ணங்கள் குழம்பா வெளிவரத் தொடங்குதுன்னு.

"வீட்டை பங்கு போடணும்"

"அதெப்படி முடியும்? அம்மா, அப்பா காலத்துக்குப் பிறகுதான் அது..."

"ரியலெஸ்டேட்காரங்ககிட்ட சொன்னா ஃப்ளாட் போட்டுக் கொடுத்துடுவாங்கல்ல. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஒரு ஃப்ளாட்ல வைச்சு பார்த்துக்கிடலாம்ல"

"யாரு?"



எல்லாரும் அமைதியானாங்க. இங்க ஒரு மகனைத் தவிர எல்லாரும் அங்கங்கலா இருக்காங்க. என் மனதிற்குள் பயம் வந்தது.

"தங்கம், வெள்ளி எல்லாம் பிரிச்சிடலாம். அந்தப் பொண்ணுக்கும் பாகம் கொடுக்கணும்ல? வயசான கிழவிக்கு இன்னும் காதுல, மூக்குல, கழுத்துல இத்தனை நகை எதுக்கு? பிரிச்சுக் கொடுக்கலாம்ல?"

இறந்து போன மகனின் சம்சாரத்தை மையமா வைச்சு மத்தவங்களும் தங்க பங்கைப் பேசத் தொடங்கினாங்க.

"பெம்பிளைப் பிள்ளைங்க இருக்க குடும்பத்துக்குத்தான் நகை நட்டு எல்லாம்"

விவாதிச்சாங்க. ஒருத்தரை ஒருத்தர் குத்தம் சொல்லிச் சாடினாங்க.

இன்னொரு மகன் குடும்பத்துல பிரிவினை வர, குடும்பங்களுக்குள்ள ஆளாளுக்குப் பேச. இடைவெளி வந்திடுச்சு. பிரிய நினைச்ச அந்தப் பெண் குட்டையில கல்லை எறிஞ்சுட்டுப் போய்ட்டா.

எதிரிக்கு எதிரி நண்பன்ற சொல்லுப்படி, எதிரும் புதிருமா பிரிஞ்சாங்க குடும்பத்துக்காரங்க. எஜமானியம்மாவை எல்லாரும் திட்டினாங்க. சரியா பிள்ளைங்களுக்குள்ள ஒத்துமைய வளக்கலைன்னு.

இதுக்கிடையில ஐயா கண்ணை மூடிட்டாரு. எரிமலை மாதிரி உள்ளார இருந்த பிரச்சனைகள் வெளிய வந்து வெடிக்கத் தொடங்கிச்சு. குடும்பங்களுக்குள்ள இடைவெளி கூடிப் போச்சு.

எல்லாத்தையும் பார்த்துட்டு நான் செவனேன்னு இருக்கதானே முடியும்? என் எஜமானியம்மாவுக்குச் சதம் அடிக்க இன்னும் 10 வருஷம் இருக்கு. யாரு பாத்துக்கிடுவான்னு எனக்குக் குழப்பம்.

இந்தப் பங்குப் பிரிப்பில் எல்லாம் சேராத மருமகளை எஜமானியம்மா கூப்பிட்டாங்க.

“நீ பல வருஷத்துக்கு முன்ன, எதிர்காலத்தில இந்தக் குடும்பத்துல பிரிவினை வரும். வராம இருக்க என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யுங்க, கடவுள்கிட்ட வேண்டிக்கங்கன்னு சொன்னியே அது இப்ப நடக்குதே. எப்படிக் கணிச்ச?"

“இது ஒன்னும் பிரம்ம சூத்திரம் இல்ல. மனித மனங்கள், எண்ணங்கள் வெளிய வரப்ப அதை படிக்கத் தெரிஞ்சா போதும்.”

இது இப்பதான் எனக்குத் தெரியவருது அப்பவே தெரிஞ்சிருந்தா மட்டும் நான் என்னத்த செய்ய முடியும்? என் எஜமானியம்மா ராணி போல கம்பீரமா எல்லாரும் அவங்க சொல்றதத்தான் செஞ்ச காலம் அது.

என் ஐயா உயிரோடு இருந்தப்ப அவங்களைப் பார்த்துக்க மாட்டோம்னு சொன்னவங்க ஐயா போன பிறகும் எஜமானியம்மாவைப் பார்த்துக்க விருப்பம் இல்லாதவங்க இதுவரை வராதவங்கதான் இப்ப வந்திருக்காங்க.

எஜமானியம்மாவோட பொருட்களைப் பிரிச்சுக்கிட்டாங்க. ஐயாவோட பணத்தையும் பிரிச்சுக்கிட்டாங்க. என் எஜமானியம்மா பேச்சற்று பரப்பிரம்மம் போல பார்த்துக்கிட்டிருந்தாங்க.
அடுத்து என்னைப் பத்திப் பேசினாங்க.

ஒரு மகனும், கணித்துச் சொன்ன மருமகளின் குடும்பமும் மட்டும் இதுலருந்து தங்களை விலக்கிக்கிட்டாங்க. எதுவும் வேண்டாம்ன்னுட்டு.

பொலிவிழந்து, களையிழந்து மயான அமைதி மாதிரி யாருமில்லாமல் அனாதையா இருக்கும் என் மரணம் இதோ நெருங்கிடுச்சு. நல்ல நினைவுகளை அசைபோட்டுக்கிட்டிருக்கேன். என் மீது அவங்களுக்கு வாஞ்சை அல்ல. என்னால் வரும் பணம்தான் முக்கியம்னு புரிஞ்சு போச்சு. எனக்கும் உணர்வுகள் உண்டுன்னு அவங்களுக்கு ஏனோ புரியலை. என்னால சொல்ல முடியுமா?
எல்லோரும் போன பிறகு, என் எஜமானியம்மா மெதுவாகக் கேட்டாங்க.

“எல்லாரும் எல்லாத்தையும் எடுத்துட்டுப் போறாங்களே. இந்த வீட்டையும் வித்துடுவாங்களோ? அப்ப யார் என்னைப் பார்த்துக்குவாங்க? அதைப் பத்தி யாரும் பேசலையே”

என் எஜமானியம்மாவையும், அவங்க குடும்பத்தையும் காத்து வந்த, இப்ப எனது 'மதிப்பால்' காக்கப்போகும் வீடு நான் அமைதியா காத்திருக்கேன். என் மேல் இறங்கப் போகும் புல்டோசரின் கரங்களை எதிர்நோக்கி.

# ‘தெரியாத விசயத்தை எழுதுவதில்லை’

## எழுத்தாளர் வா.மு. கோமு

**நேர்காணல்**
**பரிவை சே. குமார்**



எழுத்தாளார் வா.மு.கோமு என்கிற வா.மு.கோமகன் ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலைக்கும் மேற்கே பதிமூன்று கி.மீ தூரத்திலிருக்கும் வாய்ப்பாடி என்கிற குக்கிராமத்தில் முத்துச்சாமி, மணி தம்பதிகளுக்கு 20-6-1969-ல் மகனாக பிறந்தவர். கல்லூரிப் படிப்பை பாதியில் முடித்துக் கொண்டார். 1989-ல் 'ஊன்றுகோல்' என்னும் பத்திரிக்கையை நண்பர் ஜே.பி.ஆருடன் இணைந்து சைக்ளோஸ்டைல் முறையில் 100 பிரதிகள் கொண்டு வந்தார். ஆரம்பத்தில் மாலைமுரசு பேப்பரில் சில கதைகள் எழுதினார். திருப்பூரில் அச்சகத்தொழிலில் இருந்தபோது 1991-ல் 'நடுகல்' என்கிற இலக்கிய இதழை நண்பர்களுடன் இணைந்து ஆரம்பித்து 21 இதழ்கள் வந்த நிலையில் நின்று போய், மீண்டும் மறு பிறப்பெடுத்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை என 16 இதழ்களுடன் நின்று போய், தற்சமயம் இணையதள இதழாக மாதம் ஒருமுறை வந்துகொண்டிருப்பதுடன் பல புதிய எழுத்தாளர்களை அடையாளம் காட்டும் இதழாக, வளர்த்துவிடும் இதழாக தொடர்ந்து பயணிக்கிறது

‘வாழ்க்கை நம்மை வாழவே அழைக்கிறது!’ என்கிற வார்த்தையை அடிக்கடி உபயோகிப்பார். சினிமா வசனம் எழுத வாய்ப்பு தேடிவந்த போது மறுக்காமல் ‘கடலை’ என்கிற படத்திற்கு எழுதியிருக்கிறார். அழுவாச்சி வருதுங்க சாமி, பிலோமி டீச்சர், தேர்த்திருவிழா,வெள்ளந்தி உள்ளிட்ட 19 சிறுகதைத் தொகுப்புக்கள், எல்லோராலும் பாராட்டப்பட்ட கள்ளி, மங்கலத்து தேவதைகள், சயனம், நாயுருவி, ஆட்டக்காவடி உள்ளிட்ட 20 நாவல்கள், டுர்டுரா, சிவப்பு குதிரை உள்ளிட்ட 7 குறுநாவல்கள், 6 கவிதைத் தொகுப்புகள், 16 சிறார் புத்தகங்கள், 3 நினைவோடை குறிப்புகள் என 71 புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

சௌமா இலக்கிய விருது, கு.அழகிரிசாமி சிறுகதை விருது , பெரியசாமி தூரன் விருது, கு.அழகிரிசாமி சிறுகதை விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றிருக்கும் இவர் கொங்கு வட்டார வழக்கில் எழுதும் எழுத்தாளர்களில் மிக முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. கேலக்ஸிக்காக அவர் அளித்த நேர்காணலில் அவரைப் பற்றி நாம் இன்னும் அறிந்து கொள்ளலாம்.

**எழுத்தாளர் வா.மு கோமு உதயமானது எப்போது..? எப்படி..?**

1986-ல் திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் ஹையர் செகண்டரி முதல் குரூப் வாசிக்கச் செல்கையில் பள்ளியிலேயே ‘சுடர் விளக்கு’ என்கிற கையெழுத்து பத்திரிக்கை ஆரம்பித்தேன். வாரம் ஒருமுறை விசயங்களுக்குத் தக்கபடி பக்க அளவுகளுடன் பள்ளி அறைக்குள் மட்டுமே சுற்றிய பிரதி அது. கூடவே பாலா என்கிற நண்பன் அதில் ‘காட்டுவளவில் அரசியல் அலசல்’ என்று அரசியல் செய்திகள் எழுதினான். அதற்கு நானே ரசிகன். அப்போது கவிதைகள் எழுதத்துவங்கினேன். அப்போதெல்லாம் நிலா என்கிற தலைப்பிட்டு நிலாபற்றியும், சூரியன் என்று தலைப்பிட்டு சூரியன் பற்றியும், காதல் என்று தலைப்பிட்டு காதல் பற்றியும் எழுதுவதே கவிதைகள்.

பின்பாக 1989-ல் கோவையில் 'ஊன்றுகோல்' என்று சைக்ளோஸ்டைல் பிரதியாகவும், அச்சிதழாகவும் கொண்டு வருகையில் சிறுகதைகள் வரிசையாக எழுத ஆரம்பித்திருந்தேன். இதழில் கால்பக்கம், அரைப்பக்கம், முழுப்பக்கமென விளம்பரங்கள் கிட்டியது. அப்போது ஒருகுயர் நோட்டில் நாவல்களும் சில எழுதினேன். வாசிப்பவர்களிடம் நோட்டுகள் சுற்றிக்கொண்டிருந்தன. சில நோட்டுகள் கைக்கு சிக்காமல் அதற்காக சில வருடங்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். கோவை மாலைமுரசு பதிப்பில் சிறுகதைகள் பல வெளிவந்தபோது 15 ரூபாய் தொகையும் கதையொன்றுக்கு கிடைத்தது.

பின்பாக அப்பா எனக்கு வாசிக்க கொடுத்த புத்தகங்கள் அசோகமித்ரன், அஸ்வகோஸ், ஜி.நாகராஜன், சுஜாதா என்று வாசிப்பு மாறிவிட எழுதும் எழுத்துக்களும் மாற்றமடைந்துவிட்டன.

**தங்களின் இளமைக்காலம் பற்றி..?**

கோவையில் லேத் மிஷினிலிருந்து, இரும்புக்கம்பெனி, டிசிஎம் டயோட்டா என்று ஆறு ஆறு மாதங்கள் பணிக்குச் சென்றேன். ஊன்றுகோல் பிரதி அச்சடித்த அச்சகத்திலேயே அந்தத் தொழிலையும் கற்றுக்கொண்டேன். பின்பாக திருப்பூர் வந்தபிறகு அச்சகத்தில் தான் பணியிலிருந்தேன். 1991-ஆவணி மாதம் நடுகல் முதல் இதழ் வெளிவந்தது. சொந்தமாக திருப்பூரில் பள்ளிக்கால நண்பன் பாலாவுடன் இணைந்து அச்சகம் நடத்தினேன். எல்லாமே கொஞ்சம் காலம் மட்டுமே. தொன்னூறுகளின் கடைசியில் திருப்பூரிலிருந்து காசநோயை சம்பாதித்துக்கொண்டு வீடு திரும்பினேன். அப்பாவும் உடல்நலக் கோளாறால் இறந்தார். காசம் என்னை ஆறேழு வருடங்கள் துன்பப்படுத்திவிட்டு விடைபெற்றது. இதை எழுதலாமா? என்ற கேள்வி மனதில் பல வருடங்கள் தொடர்ந்துகொண்டே இருந்தது. இப்போது 2026-ல் 'சானடோரியம்' என்கிற தலைப்பில் நாவலாக வெளிவரவிருக்கிறது.

**வட்டார வழக்குக் கதைகளை எழுதும் ஆர்வம் எப்படி ஏற்பட்டது..?**

திட்டமிட்டு நடந்ததல்ல. ஆரம்பகால வாசிப்பில் கி.ரா, பூமணி இவர்களை வாசிக்கையில் அந்தந்த வட்டார பேச்சு வழக்குகள் அவர்கள் புத்தகங்களில் கண்டேன். எனக்கு எளிதாக கொங்கு மண்ணின் பேச்சுவழக்கு எழுத்தில் வந்து சேர்ந்துவிட்டது. அதை குறைத்துக்கொண்டு பொதுத்தமிழில் எழுதும் ஆசையும் போய்விட்டது. இருந்தும் வியாபாரப் பத்திரிக்கைகளில் எழுதுகையில் கவனமாய் பொதுத்தமிழில் தான் எழுதுகிறேன்.

**தங்களின் கதைகளை பாலியல் கதைகள் எனச் சிலர் சொல்வது குறித்து..?**

அப்பா உயிருடன் இருந்திருந்தால் இப்படி எழுதியிருக்கமாட்டேன் என்றுதான் நினைக்கிறேன். அவர் என் ஆரம்பகால எழுத்துக்களை வாசித்து குற்றம் குறை கூறியவர். 'கொசு' என்றொரு கதை எழுதினேன். இறுதியில் கொசுக்கடி வாங்கியவன் கொசுவாக மாறிவிடுவான். அதை கனவு என்று முடித்திருந்தேன். 'மாறிட்டு போறாண்டா.. கனவுன்னு ஏன் சொல்றே? தூக்கு அதை!' என்றவர். நான் ரொம்பகாலமாய் எழுதிவந்தாலும் தொகுப்பாக 'அழுவாச்சி வருதுங் சாமி' 'மண்பூதம்' என்று தாமதமாய்த்தான் வெளிவந்தன. 'கள்ளி' என்கிற நாவல் எனது சிறப்பான படைப்பு என்கிறார்கள். ஆனால் வந்த புதிதில் நிலவரமெல்லாம் அறிந்துகொள்ள முடியவில்லை. பதிப்பகத்தார் என்னால் நஷ்டப்பட்டு விட்டாரோ என்ற கவலை



பிடித்துக்கொண்டது. பின்பாக சாந்தாமணி நாவல் வெளிவந்தது. ஏக விற்பனை என்றார்கள். அதிரடியாக பாலியலை எழுதிக்காட்டினேன். அடுத்து மங்கலத்து தேவதைகள். பாலியல் எழுத்தாளர் என்ற பெயர் அப்போது அடிபட்டது. பெரிதாக வருத்தப்படவும் இல்லை. அப்படி எழுதியும் பைசா பெருசாய் பார்க்காமல் போனதும் இப்போது வருத்தம் தான். போகப்போக நான் பாதைமாறி விலகி வந்துவிட்டேன்.

**மனதில்பட்டதை மறைக்காமல் எழுதும் எழுத்தாளர் என்ற பெயர் பெற்ற தாங்கள், எழுத நினைத்து இதுவரை எழுதாத கதை என்று எதுவும் உண்டா..? அப்படியெனில் ஏன் எழுதவில்லை..?**

எழுத்தாளனுக்கு பலவிதங்களில் எழுதிப்பார்க்க ஆசை நிச்சயம் உண்டு. எழுத நினைத்து எழுதாமல் இருந்தது காசநோய் தன்மைகளைத்தான். அதையும் எழுதிவிட்டேன். முன்பாக எந்த திட்டமிடல்களும் என்னிடமில்லை. இப்படி எழுதலாம் என எழுத அமர்ந்தபிறகு கூட யோசித்து எழுதுபவன். இப்போது பித்தப்பை, சிறுநீரக கற்கள் இவற்றிற்காக கொஞ்சம் அலைந்த அனுபவங்கள் இருக்கிறது. தீர்ந்தபாடில்லை என்பதால் சேகரமாகிறது. அடுத்த சிறுகதை ஒன்று பிறந்துவிடலாம் எப்போது வேண்டுமானாலும். ஓ! சொந்த அனுபவங்களைத்தான் எழுதுவார் போல! என்று எண்ணிவிடாதீர்கள். கற்பனைக்கதைகள் பல எழுதிவிட்டேன் உண்மையின் சாயல்களோடு.

**தங்களின் கதைகளில் இழையோடும் நகைச்சுவை உணர்வுகள் வாசிப்பவரை கொங்கு வட்டார வழக்குக்குள் ஈர்த்துக் கொள்ளும். அப்படியான நகைச்சுவையை கதைக்காக சேர்ப்பீர்களா..? அல்லது அந்தக் களத்தில் அது இயல்பாய் அமைகிறதா..?**

இயல்பாகவே நான் நகைச்சுவைத்தன்மை உள்ளவன் தான். யாரும் துக்கமான விசயங்களை வாசிக்க தயாராய் இல்லையென்று நானாகவே நினைத்துக் கொள்கிறேன். கதைக்காக நகைச்சுவைகள் வருவதில்லை. அதில் வரும் கேரக்டர் அப்படியான தன்மையுடையவராய் இருப்பார். அப்படியில்லையெனினும் சுற்றுப்புறத்தில் இருப்பவர்கள் குசும்புக்காரர்களாய் இருப்பார்கள். சம்பவம் ஒன்று சொல்கிறேன். டாஸ்மார்க் விற்பனையாளர் சொன்னது தான். நான் கேட்டேன்.. 'என்ன இப்பிடி சிரிக்கறீங்க குழந்தைவேலு?' 'இல்லங்க.. இப்ப ஒருத்தரு போனாரே.. அவரு என்கிட்ட நல்ல விஸ்கீல ஒரு பிராந்து குடுங்கன்னு கேட்டு வாங்கிட்டு போறாரு!' அவ்வளவுதான். இது இயல்பாய் அமைவது தான். உடனே ஒரு கதையில் இந்தச்சமபவம் வந்துவிடாது. ஒரு வருடமேனும் மனதில் இருக்க வாய்ப்பிருக்கிறது. எப்போதேனும் கதையின் கேரக்டர் டாஸ்மார்க் சென்றால் இந்த சமபவம் அந்தக்கதைக்குள் வந்து உட்கார்ந்து கொள்ளும்.

**நடுகல் இணைய இதழைக் கொண்டு வரும் எண்ணம் எப்போது ஏற்பட்டது..? தொடர்ந்து இயங்குவதில் இருக்கும் சிக்கலும்… மகிழ்ச்சியும் பற்றிச் சொல்லுங்களேன்?**

**ந**ண்பர்கள் சிலர் உதவியதால் 3 மாதத்திற்கு ஒருமுறை நடுகல் அச்சிதழாக 16 இதழ்கள் வெளிவந்தது. பின்பாக நண்பர்களை தொந்தரவு செய்ய எனக்கு விருப்பமில்லாமல் போய்விட்டது. என்ன வழி என்று யோசிக்கையில் இணைய இதழாக வடிவமைத்துக் கொடுக்க ஒருவர் அமைந்தார். இன்னமும் அவரை நான் நேரில் சந்திக்கவில்லை. இப்போது இணையத்தில் பல இதழ்கள் வருகின்றன. சரியான தேதியில் வரும் இதழாக ஒரு சில இதழ்கள் உள்ளன. புதியவர்களின் படைப்புகள் நடுகல் மெயிலுக்கு வந்து சேர்ந்து விடுவதற்கு ஓரளவு படைப்புத்தன்மை இருந்தால் வெளிவந்துவிடும் என்கிற நம்பிக்கையை முதல் இதழிலிருந்தே உருவாக்கியிருந்தேன். ஒவ்வொரு இதழிலும் எப்படியேனும் இரு புதிய படைப்பாளிகள் கலந்துகொள்கிறார்கள். தொடர்ந்து இயங்குபவர்கள் வெற்றிபெறுகிறார்கள். வாழ்க்கைச்சூழல் சிரமப்படுத்துகையில் சில கதைகளோடு சிலர் ஒதுங்கிவிடுகிறார்கள். நடுகல் இதழால் வளர்ச்சியடைந்தவர்கள் என்கிற லிஸ்ட் இருந்தது முன்பாக. இப்போது அதையும் மறந்துவிட்டேன். இருபத்தைந்து படைப்புகளுக்கும் மேலாக ஒவ்வொரு இதழிலும் படைப்புகள் மாதாமாதம் வருகிறது. இது அதிகம் என்று சொல்கிறார்கள். குறைவாய் நிறைவாய் செய்யலாமே என்றும் கூறுகிறார்கள். தொடர்ந்து இயங்குவதில் சிக்கல் எதுவுமில்லை. அவ்வப்போது மெயில் பார்த்து படைப்புகளை எடுத்து சேகரித்து சரிபார்த்து ஓவியமும் எடுத்து வைக்க வேண்டும். அமர்ந்ததும் அனைத்தையும் எடுத்து வாசித்து ஓவியம் இணைத்து செய்வது முடியாத காரியம். கிட்டத்தட்ட பல வருடங்களாக அச்சிதழாக நடத்திய அனுபவம் இருப்பதால் இணையம் மிக எளிதாக இருப்பதாக உணர்கிறேன். அதில் பக்க அளவுகள் என்கிற சிக்கல் இருந்தது. இங்கே அது இல்லை. இயல்பான விஷயமாகத்தான் இதுவும் இருக்கிறது. ஓரளவான கதைகள் பின்னாலும்.. முன்னால் வரவர நல்ல கதைகளும் நடுகல் இதழில் நீங்களே கவனிக்கலாம்.







**புதிய எழுத்தாளர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதற்கு தாங்கள் மிகவும் ஆசைப்படுவீர்கள் என்பதை நடுகல் சொல்கிறது… அப்படியான புதியவர்கள் தங்களின் எழுத்தில் மேம்பட வேண்டும் எனில் தாங்கள் சொல்லும் அறிவுரை என்னவாக இருக்கும்?**

**தொ**டர்ந்து வாசிக்க வேண்டும், தொடர்ந்து படைப்புகள் எழுதுவதில் முனைப்போடு இருக்க வேண்டும். வாசித்த நல்ல கதைகள் மனதை விட்டு நீங்காமல் இருக்க வேண்டும். அதைத்தாண்டிய கதையைத்தான் இனி எழுதனும் என்ற பிடிவாதம் இருக்க வேண்டும். புதியவர்களின் படைப்புகள் முதலாக வாசிக்கையில் ‘அட!’ என்று சில இடங்களில் ஆச்சரியப்படுகிறேன். அதுவே அவர்கள் கதையை வாசிக்க ஆர்வத்தை கொடுக்கிறது. இவர் நடுகல் இணையத்தில் தொடர்ந்து எழுத வேண்டுமென நினைத்துக்கொள்வேன். உங்கள் கதை அருமை என்று மெயிலில் பதிலும் நான் இடுவதில்லை. அருமை என்றாலே இதழில் வந்துவிடுகிறதே!

**தங்களின் அப்பாதான் தங்களை வாசிக்கப் பழக்கினார் என்று சொல்லியிருக்கிறீர்கள்… அப்பா எழுதுவாரா..?**

அப்பாவின் இயற்பெயர் முத்துச்சாமி. முத்துப்பொருணன் என்கிற புனைப்பெயரில் 70-களில் பல சிற்றிதழ்களில் கவிதைகள் மட்டுமே எழுதினார். 91-ல் திருப்பூரிலிருந்து வெளிவந்த நடுகல் அச்சிதழில் அவர் புதிதாகவும் சில

கவிதைகள் எழுதினார். அட்டைப்பட கவிதையும் இடம்பெற்றது. ‘எழுபதுகளில் பரியாகாமல் விட்டுப்போன நரி’ என்கிற தலைப்பில் ஒரு கவிதை இதழில் வந்த சமயம் என்னிடம், ‘இது ஏன் தெரியுமா?’ என்ற கேள்வியை வைத்தார். ‘நீ 70-ல எழுதி வெளிவராமல் போன கவிதையா இருக்கும்’ என்றேன். ‘சரிதான்’ என்றார். அவர் ஒரு தொகுப்பு கொண்டுவர முயற்சித்திருக்கிறார். ஏனோ அதை கிடப்பில் போட்டுவிட்டார். அவரது மரணத்திற்குப்பிறகு அவரது கவிதைகளைத் தொகுத்து கோவை ஞானியிடம் கொடுத்தேன். அவர் ‘முத்துப்பொருணன் கவிதைகள்’ என்ற தலைப்பில் தொகுப்பை கொண்டு வந்தார். சிறுகதை எழுதும் முயற்சியை அவர் துவங்கவில்லை.

**எழுத்துலகில் தங்களுக்கென ஒரு இடத்தைப் பிடித்திருந்தாலும் மன நிறைவான புத்தகத்தைக் கொண்டு வரும் கனவு ஏதுவும் இருக்கிறதா..? அப்படியெனில் அது எப்போது நிகழும் எனச் சொல்ல முடியுமா..?**

இப்படியொரு கேள்வி எழுத்தாளரிடம் வைப்பது தவறு. எழுதி முடிக்கப்படும் ஒவ்வொரு படைப்புமே எழுத்தாளனின் மனநிறைவான படைப்புகள் தான். ஒவ்வொரு முறையும் எழுத்தாளன் சிறந்ததை கொடுக்கணுமென முயற்சித்துக்கொண்டேதான் இருக்கிறான். எந்தப்படைப்பும் முழுதிருப்தியை எழுத்தாளனுக்கு கொடுத்திருக்காது என்றே நினைக்கிறேன். அதனால்தான் தொடர்ந்து இயங்குகிறான். சமீபகாலமாக நான் எழுதும் நாவல்கள் போட்டிகளுக்கும் செல்கின்றன. முன்பெல்லாம் போட்டிகளில் கலந்துகொள்ளும் எண்ணம் இல்லாமல் இருந்தேன். போட்டிகளுக்கு என்று எழுதுகையில் எழுத்து வேறுவிதமாய் இருக்கவேண்டுமென திட்டமிடுகிறேன். இதனால் என்னுடைய... கள்ளி-2, ஆகாவழி, கொடாவெட்டு, வாழங்கருக்கு, சானடோரியம் போன்ற சமீபத்திய நாவல்கள் முந்தைய படைப்புகள் பலவற்றைவிட முக்கியமானவைகளாக எனக்குப்படுகிறது. இன்னமும் போகப்போக வரும் நாவல்கள் இன்னமும் மெருகு கூடிவிடுமென்ற நம்பிக்கை இருக்கிறது.

**சில பல விருதுகளை வாங்கியிருந்தாலும் இந்த விருது வாங்க வேண்டும் என்ற கனவு விருதாய் எதுவும் இருக்கிறதா..?**

இது வரை கிட்டிய விருதுகள் கூட நான் எதிர்பாராமல் கிட்டியவைகள் தான். விருதுகள் சமீப மூன்றுவருட காலங்களில் தான் எனக்கு கிட்டுகின்றன. எனக்கு கனவு விருது என்று எதுவுமில்லை. வரும் விருதுகளை மகிழ்வாய் பெற்றுக்கொள்கிறேன்.






**தோட்டப் பணிகளில் தங்களுக்கு இருக்கும் ஈடுபாட்டை வைத்து, அப்படியானதொரு நாவல் வருமென எதிர்பார்க்கலாமா..?**

நிச்சயமாக... நீங்கள் சொன்னபிறகுதான் இந்த யோசனையே எனக்கு வருகிறது. முன்பாக சிறுகதைகளில் மட்டுமே தோட்டப்பணிகள் இடம்பெற்று வந்தன. நாவல்களில் தோட்டம் கவனிக்கும் பெரியவர்கள் வந்திருக்கிறார்கள். நாவலின் போக்கில் கிராமிய நாவலாக அது இருப்பின் தோட்டமும் அங்கு விளையும் பயிர் வகைமைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

**தங்களின் நாவல்களில் பெண் கதாபாத்திரங்கள் இயல்பாகவே அழுத்தமாக அமைகின்றனவா அல்லது அந்த பாத்திரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதுவீர்களா..?**

என் கதைகளில் வரும் பெண்கள் குறுநகரம், கிராமம் சார்ந்த பெண்கள் தான். முப்பது வருட காலத்தில் பெண்களின் மனநிலை மாறியிருப்பதை கண்கூடாகக் காண்கிறேன். பலரிடமும் பேசுகிறேன். எழுதப்படும் கதையில் வரும் பெண் யார் என்பதை நான் மனதில் நினைத்துப்பார்த்து தீர்மானித்து எழுதப்படும் பெண்ணோடு ஒரிஜனல் பெண்ணை கொண்டு போய் ஒட்டுகிறேன். மனதில் பழகிய பெண் இருப்பதால் எந்த எந்த நேரங்களில் எப்படியெல்லாம் அந்தப்பெண் நடந்துகொள்வாள் என்பது அசலாகவே எனக்குத்தெரியுமென்பதால் மிக எளிதாக கதை வேகமெடுத்து சென்றுகொண்டே இருக்கும். அதை நான் தடைபோடுவதுமில்லை. பெருநகரப்பெண்களின் பழக்க வழக்கங்கள் ஓரளவுதான் எனக்குத் தெரியுமென்பதால் தெரியாத விசயத்தை எழுதுவதுமில்லை.

# செல்லங்களும் செல்களும்



இன்று பெற்றோர்கள் எதிர்கொள்ள வேண்டிய தலையாயப் பிரச்சினையாக உருவாகி இருப்பது ஒன்றுண்டு. அது நமது சிறு குழந்தைகளும் சிறுவர் சிறுமியரும் நேரம் காலமின்றி அலைபேசியில் ஆழ்ந்துகிடக்கும் அவலம் தான்.

ஆறு மாதக் குழந்தைக்குக் கூட, கண் முன்னே ஏதேனும் காட்சியுடனான பாடலை அலைபேசியில் காட்டிவிட்டால் போதும்..... அமைதியாக, இமை கூட அசையாமல் தாய் ஊட்டுவதை அழும்பு செய்யாமல் உண்டு விடும்.

நம் தாய்மார்களும் குழந்தைக்கு சோறூட்டும் நேரத்து மல்லாட்டத்தை தவிர்க்கவும் குழந்தை வயிராற சாப்பிட்டால் போதுமென்றும் அலைபேசியை குழந்தை கையில் தந்து விடுகிறார்கள்.. அங்கேயே ஆரம்பிக்கிறது சனி!

இன்று பெரும்பாலான குழந்தைகள் வெளியே சென்று விளையாடுவதில்லை. புதிய நட்புகளைத் தேடுவதில்லை. அம்மா அப்பா, தாத்தா பாட்டி என யாரிடமாவது அலைபேசியைப் பெற்று பரபரவென அதனுடன் ஐக்கியமாகிப் போகிறார்கள். லேசில் அந்த அலைபேசியை அவர்களிடம் இருந்து திரும்ப வாங்கவும் இயலுவதில்லை. பெரியவர்களிடம் நைச்சியமாகப் பேசி அலைபேசியை வாங்கிக் கொள்ளவும் கற்றுக்கொண்டு விட்டார்கள்.

பிள்ளைகள் வெளியே டியூஷன் போகையில், அவர்கள் இருப்பிடத்தை தெரிந்து கொள்ளவும் அவசரத்திற்கு அழைக்கவும் சில பெற்றோர் தன் பழைய அலைபேசியை அவர்களுக்குத் தந்து விடுவதும் நடக்கிறது.

கிடைத்தற்கரிய குழந்தைப் பருவத்தை, வாழ்க்கையின் அடித்தளமாக அமையப்போகும் பிள்ளை பருவத்தை இந்த அலைபேசி பலியாக்கி கொண்டு விடுகிறது என்பதை உணர்கிறோமோ?

**மோகன் ஜி, மும்பை**

அலைபேசிகளில் உள்ள எது குழந்தைகளை தன் வசம் ஈர்த்துப் பிடிக்கிறது? இதற்குப் பல காரணங்களை கூறலாம்.

முதலாவதாக, பெற்றோர் தம் குழந்தைகளுடன் நேரம் செலவிடுவதே இல்லை. கணவன் மனைவியென இருவருமே அலுவலகப் பணி செய்ய வேண்டிய பொருளாதார தேவை இருந்தாலும், அவர்களும்கூட தங்கள் மிகுதி நேரத்தை அலைபேசியில் தான் செலவிடுகிறார்கள் குழந்தைகளுடன் அளவளாவ அவர்களுக்கு எஞ்சிய நேரம் என்ன இருக்கிறது?
முன்பெல்லாம் வீடுகளில் தாத்தா பாட்டி என்று பெரியவர்கள் உடன் இருந்தார்கள். குழந்தைகளின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தார்கள். கதைகள் சொல்லியும் பிள்ளைகளுக்கு ஆதரவாய் இருந்தும் அவர்களின் மன வளம் காத்தார்கள். இன்று பெரும்பாலான குடும்பங்கள் சாட்டிலைட் குடும்பங்களாகச் சுருங்கி விட்டன. யாவருமே தீவுகளாக சிதறி கிடக்கிறார்கள்.

அலைபேசியில் பல 'ஆப்'புகளும் கேம்ஸ் எனப்படும் ஓயாத விளையாட்டுகளும் அவற்றின் கற்பனைக்கெட்டாத வண்ணச் சலனங்களும் குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டி எழுச்சியூட்டுகிறது. அவை மூளையில் நிகழ்த்தும் ரசாயன மாற்றங்களால் டோப்பொமைன் சுரப்பிகள் அதீத உற்சாகம் தருகின்றன.

இந்த அலைபேசி ஈர்ப்பும் அதிக நேரம் அத்துடன் செலவிடுவதும் நம் பிள்ளைகளில் ஏற்படுத்தும் பாதிப்புகள் பலவகையாகும். இதனால் அவர்களுக்குப் பார்வை குறைபாடு, கண் பிரச்சனைகள், தூக்கமின்மை, ஒற்றைத் தலைவலி, எதிலும் கவனம் செலுத்த இயலாமை, கொடுங்கனாக்கள் போன்றவை ஏற்படுகின்றன.



தொடர்ந்து அலைபேசியை பார்ப்பதால் ஏற்படும் நேர விரயத்தால் படிப்பது, விளையாடுவது, நேரத்திற்கு சாப்பிடுவது குளிப்பது போன்ற சுகாதார அவசியங்களையும் புறக்கணிக்கிறார்கள்

செல்போன் மறுக்கப்பட்டு விட்டாலோ மிகுந்த உணர்ச்சி வசப்படுகிறார்கள். கோபப்படுதல், பொருட்களை தூக்கி எறிதல் என மனப்பிறழ்வின் ஆரம்பகட்டத்தை தொடும் எல்லை வரை போகிறார்கள்.

இதனால் குடும்பத்திலுள்ளவர்களுடன் பிள்ளைகள் பேசுவதும் உறவாடுவதும் அறவே இல்லாமல் போவதும் கண்கூடு. அலைபேசி வெளிப்படுத்தும் நீலக்கதிர்வீச்சு மின்காந்த அலைகளும் தூங்குவதற்கு தேவையான மெலடினென் சுரப்பைத் தடுப்பதால் சரிவரத் தூங்காமல் குழந்தைகள் தவிக்கிறார்கள். இந்தத் தூக்கமின்மையால் எரிச்சலும் கவனச்சிதறலும் விபத்துகளும் கூட ஏற்படுவதற்கு ஏதுவாகிறது.

நட்புகளும் இல்லை, குடும்பத்தினருடன் அதிகம் பேச்சும் இல்லை என்றாகிப் போனதால் தனிமைப்பட்டு விடுகிறார்கள். அலைபேசியுடன் கட்டுண்டு கிடப்பதால் விளையாட்டும் உடல் அசைவுகளும் அதிகமின்றி உடற்பருமன் ஆகிவிடும் அபாயமும் நோய்வாய் படுவதற்கும் வாய்ப்புகள் அதிகம்.

ஒரே நிலையில் அலை பேசி பிடித்துக் கொண்டு குறைந்து பார்த்தபடி இருப்பதால் கை மூட்டுகளில் வலி, கழுத்து வலி போன்றவை மிக இளம் வயதிலேயே வந்து சேர்ந்து விடுகிறது.

மனநிலை ஊசலாட்டம், மன அழுத்தம் பிறருடன் பழகும் விதத்தில் முறையின்மை போன்றவை அழையா விருந்தாளிகளாக நம் பிள்ளைகளை பெற்றது.

எதையும் பகுத்தாய்ந்து செயல்படும் மனநிலையை அலைபேசி உபயோகம் குறைத்து விடுகிறது. போட்டி நிறைந்த இந்த உலகத்தில் எதிர்நீச்சல் போட்டு வெல்லும் உறுதியை அதீத அலைபேசி உபயோகம் கேள்விக்குரியதாக்குகிறது.
உடனடியாக இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண பெற்றோர்கள் செய்ய வேண்டியவை எவை என பார்ப்போம்.

குழந்தைகளிடம் முரட்டுத்தனமாக அலைபேசிகளைப் பிடுங்குவதும் அவர்களை தண்டிப்பதும் எதிர்மறை பலன்களையே தரும். பெரியவர்களிடம் உண்டாகும் குடிப்பழக்கம், புகைப் பழக்கம் போன்றவற்றிற்கு இந்த
'அலைபேசி அடிமைப்படுதல்' எந்த விதத்திலும் குறைந்த தீமையன்று. பக்குவமாகவே இதற்குத் தீர்வு காணவேண்டும். முதலில் குடும்பமாகச் சேர்ந்தமர்ந்து நல்ல விதமாக அலைபேசி உபயோகிப்பதை குறைப்பது பற்றி அலச வேண்டும். எக்காரணம் கொண்டும் சாப்பாட்டு மேஜை மற்றும் படுக்கை அறைக்குள் அலைபேசிக்கு இடமில்லை என்று தீர்மானித்து செயல்பட வேண்டும்.

நாளில் ஒரு குறிப்பிட்ட நேர அளவு, வார இறுதியில் விடுமுறை நாட்களில் சற்று கூடுதலான நேரம் என்று அலைபேசி உபயோகத்தை வரையறுக்கலாம். பெற்றோர் முன்மாதிரியாக அலைபேசி உபயோகத்தை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அலுவல் விஷயமாக வரும் அழைப்புகள் தவிர்க்க முடியாததாகையால் அவற்றை பிள்ளைகளுக்கு புரிய வைத்து விட்டு தேவைப் படும்போது மட்டும் உபயோகிக்கவும்.

வாய்ப்பு அமையும் போதெல்லாம் குழந்தைகளுடன் வெளியிடங்களுக்குச் செல்லுதல் சுற்றுலா போதல் என்று அழைத்துப் போகவும். அங்கெல்லாம் குடும்பமா மனம் விட்டுப் பேசி மகிழ இறுக்கம் தளரும்.

குழந்தைகளின் சிறு வெற்றிகளையும் கொண்டாடி உற்சாகமூட்டுங்கள். விளையாட்டுகளில் ஆர்வம் காட்டுங்கள். பாட்டு நடனம் என்று பல கலைகளிலும் அவர்களை ஈடுபடுத்துங்கள்.

குழந்தைகள் அலைபேசி பயன்பாட்டை அவர்களுக்குத் தெரியாமல் கண்காணியுங்கள். அழும் குழந்தைகளுக்கு சமாதானப்படுத்த வேண்டி செல்போன் தருவதை முதலில் நிறுத்துங்கள்.

குழந்தைகளுடைய நடவடிக்கைகளில் அலைபேசி பாதிப்பு அதிகம் இருந்தால் மனநல கவுன்சிலிங் ஆலோசனை மேற்கொள்ளத் தயங்க வேண்டாம்.

அலைபேசி போன்ற விஞ்ஞான சாதனம் நம் உபயோக சௌகரியத்திற்கு தான். அவையே நம் குழந்தைகளை உபயோகப்படுத்திக் கொள்ள விட்டு விடாதீர்கள்!

# தர்மம்



ஆர்.வி.சரவணன்

பெருமாள் கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு படியிறங்கி வெளி வந்த சரண் திரும்பி கோபுரத்தை அண்ணாந்து பார்த்து கன்னத்தில் போட்டு கொண்டான். கோவில் வாசலில் இருபுறமும் வயதான ஆண்களும் பெண்களுமாய் யாசகம் கேட்பதற்காக கையில் தட்டுடன் ஆங்காங்கே அமர்ந்திருந்தார்கள். கோவிலில் இருந்து வெளி வருபவர்களிடம் "ஐயா, அம்மா" என்றபடி தங்கள் கையிலிருந்த தட்டை நீட்டினார்கள். சிலர் காசு போட்டார்கள். சிலர் கண்டும் காணாமல் அவர்களை கடந்தார்கள்.

மற்றவர்களோடு சரணும் அவர்களை தாண்டுகையில் வலது பக்கம் அமர்ந்திருந்த வயதான மூன்று பெண்மணிகளில் ஒருவர் மட்டும் தன் கையில் வைத்திருந்த தட்டை அவன் முன்னே நீட்டி "யப்பா தர்மம் பண்ணுப்பா" என்றார் கெஞ்சலாக. மற்ற இருவர் தங்களுக்குள் ஏதோ பேசி கொண்டிருந்தார்கள்.

சரண் பாக்கெட்டிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டொன்றை எடுத்து தர்மம் கேட்ட பெண்மணியின் தட்டில் போட்டு விட்டு திரும்ப எத்தனிக்கையில் பேசிக் கொண்டிருந்த பெண்களில் ஒருவர் " "யப்பா. யப்பா..... எனக்குப்பா" என்றபடி தட்டை நீட்டி எழுந்தே நின்று விட்டார். கொடுக்காவிட்டால் அவன் கூடவே பின் தொடர்ந்து வருவார் போலிருந்தது.

தனது சட்டை பாக்கெட்டை பார்த்தான். இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளும் ஒரு ஐநூறு ரூபாய் நோட்டும் இருந்தது. ஒரு பத்து ரூபாயை எடுத்து , வலுக்கட்டாயமாக கேட்ட பெண்மணியின் தட்டில் போட்டவன், அங்கிருந்து உடனே அகன்று விடும் எண்ணத்தில் வேகமாக நடக்க ஆரம்பித்தான். மூன்றாவது பெண்மணியும் கேட்டு விட்டால் என்னாவது? பஸ்சுக்கு சில்லறை வேண்டும்.

ஆனால் அந்த பெண்மணி அப்படியொன்றும் குரல் கொடுக்கவில்லை. அவனை ஒரு பார்வை பார்த்தபடி அமைதியாக இருந்து விட்டார். இரண்டு பேருக்கு கொடுத்திருகிறான். நாமளும் போய் எப்படி கேட்பது என்று அவர் நினைத்திருக்க கூடும். இரண்டு பேருக்கு கொடுத்தவன் நமக்கு கொடுக்காம போறான் பாரு என்றும் பொருமியிருக்கலாம்.

இப்படியாக சரண் எண்ணமிட்டபடி நான்கைந்து கடைகள் தாண்டி வந்த திருப்பத்தில் திரும்பும்போது தான் மனசாட்சி அவனிடம் கேள்வி கேட்க ஆரம்பித்தது.

'ஏன்டா. மூன்று பேர்ல மிச்சமிருப்பது ஒரு பெண்மணி தான். உன் பாக்கெட்டில் இருந்த முப்பது ரூபாயில் மிச்சமிருப்பதும் பத்து ரூபாய் தான். அந்த பத்து ரூபாய் அவருக்கு கொடுத்திருக்கலாமே. ஏன் ஐநூறு ரூபாய் உன்னால சில்லறை மாத்திக்க முடியாதா?. இல்லே மாத்தாம தான் இருந்திட போறியா? '

மனசாட்சியின் இந்த கேள்வி அவனை திக்குமுக்காட வைக்கவே அவனது கால்கள் மீண்டும் கோவில் வாசலை நோக்கி நடை போட்டது.

கோவில் வாசலுக்கு வந்த சரண் மிச்சமிருந்த அந்த பத்து ரூபாயை எடுத்தான். அவன் பணம் எடுப்பதை பார்த்த எதிரில் இருந்தவர்கள் எனக்குப்பா என்று கோரசாக குரல் கொடுக்க ஆரம்பிக்க, அருண் யாருக்கு பணம் கொடுக்காமல் விட்டு வந்தானோ அந்த பெண்மணியின் அருகில் சென்று அவரது தட்டில் பத்து ரூபாயை போட்டான். சரணை நிமிர்ந்து பார்த்த அந்த பெண்மணி கேட்டார்.

" என்னப்பா மனசு கேக்காம வந்துட்டியா?"

'மனசு கேட்டதாலதான் வந்தேன்' என நினைத்துக் கொண்டு லேசான புன்னகையுடன் நகர்ந்தான்.

# கேலக்ஸி வாசகர் வட்டம் : ஏழு நூல்கள்... நிறைவான விழா... ஒரு வாசகனின் பார்வை

அன்புச்செழியன்

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்
– என்கிறது குறள்.

ஒரு வாசகனாய் நாம் இன்புறுவது கண்டு வாசிப்பை நேசிக்கும் உலகோர் அனைவரும் இன்புறுகிறார்கள். மகிழ்ச்சியில் சிறந்தது பிறர் மகிழக் காணல். இதற்கு நாம் ஆனந்தப்படாமல் என்ன செய்யமுடியும்..?
எனது புரிதலின்படி,
வாசிப்பை நேசிப்பவர்கள் – வாசகர்கள்
வாசிப்பையே சுவாசிப்பவர்கள் – வாசக எழுத்தாளர்கள்

நமது கேலக்ஸி வாசகர் வட்ட நூல் வெளியீட்டு விழா வாசிப்பவர்களுக்கும், வாசிப்பை நேசிப்பவர்களுக்குமான சொந்தக்களமாக அமைந்து மனநிறைவை ஏற்படுத்தியிருந்தது.

புதிய புதிய தொழில்நுட்பங்கள், அறிவியல் வளர்ச்சி சமூக சூழல்கள் காரணமாக இன்றைய இளையோர்களிடையே வாசிப்பு மிக மிகக் குறைந்துள்ளது. முகநூலும், பகிரியுமே வாசிப்புக்கான வாழ்வாகிப்போன இந்தக் காலகட்டத்தில் அன்பிற்கினிய நண்பர் பாலாஜி பாஸ்கரனின் தொடர் இலக்கிய பயணத்தினாலும் முயற்சியாலும் கடந்த 2022 ஜூன் 18ல் தொடங்கி இந்தக்குறுகிய கால இலக்கியப் பயணத்தில் 70க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டு தமிழால் நாம் பெற்றதை / கற்றதை உலகுக்குக் கொடுக்கும் உன்னத நோக்குடன் தமிழுக்குச் செய்யும் சேவையாய்த் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கிறது நமது கேலக்ஸி.

மேலும், மாதாந்திர கேலக்ஸி மின்னிதழ், வருடாந்திர சிறுகதைப் போட்டிகள் மூலம் புத்தம் புதிய எழுத்தாளர்களையும் அவர்கள் சிந்தனைகளையும் உலகிற்கு அறிமுகம் செய்வதில் பெரும்பங்காற்றுகிறது நமது கேலக்ஸி. எனக்கு சிறுவயதில் நான் வாசித்து மகிழ்ந்த தாயின் கருவறை குறித்த கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

"அங்கே
இருட்டுதான்
ஆனால் அந்த இடம்
பரிசுத்தம்...

இங்கே
ஏய்ப்பவர்களும் இல்லை
ஏமாற்றுபவர்களும் இல்லை...

என் கண்கள் இங்கிருந்தவரை
கண்ணீரைக் கண்டதில்லை...

என்னைச் சுற்றிலும்
ரத்த ஆறுகள்தான் – ஆனால்
கத்தியும், கலவரமும்
காணவேயில்லை...

அங்கே இருட்டுதான்
ஆனால் அந்த இடம்
பரிசுத்தம்..."



ஒரு நூல் படைப்பது, வெளிவருவது என்பது ஒரு தாயின் கருவறையிலிருந்து பிறக்கும் மழலை போன்றது. ஒவ்வொரு நூலும் அந்த எழுத்தாளரின் எண்ணக் கருவறையிலிருந்து பிறக்கும் குழந்தைகள். இவ்வாறு தன் எழுத்துக்களை, சிந்தனைகளை உலகிற்கு எடுத்துச் சொல்ல நினைக்கும் புத்தம்புது எழுத்தாளர்களைத் தொடர்ந்து அறிமுகம் செய்வதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு நூலையும் உலகோர் அனைவருக்கும் கொண்டு சென்று சேர்க்க தினம் ஒரு நூல், ஒரு கட்டுரை என வலையொளிகளில் நூல்களின் சிறப்பு குறித்துப் பேசி காணொளிகளாய்ப் பரப்பி வருகிறது கேலக்ஸி.




இத்தகைய பெரும்பயணத்தின் சிறிய பகுதியாக கடந்த 08/11/2025 அன்று நமது கேலக்ஸி வாசகர் வட்டம் தனது அடுத்த குறுநடையாக மதுரையில் ஏழு நூல்களை அறிமுகம் செய்து வெளியிட்டது.

இந்தக் கட்டுரையை இரண்டு பகுதிகளாகப் பிரித்து எழுதுவது சிறப்பு என நினைக்கிறேன். அதன்படி,

அ) விழாவிற்கு முன்னான நிகழ்வுகள்:
கடந்த அக்டோபர் 11ம் தேதி நமது கேலக்ஸி மதுரை வாசகர் வட்ட கதைப்போமா நிகழ்வின் தொடர்ச்சியாக ஒரு சின்னஞ்சிறு உரையாடல்...

பாலாஜி : சுப்பு, செழியன்
சுப்பு : எஸ் பாஸ்
செழியன் : சொல்லுங்க நண்பா

பாலாஜி : நான் அடுத்த மாதம்
சுப்பு : எஸ் பாஸ்
செழியன் : சொல்லுங்க நண்பா

பாலாஜி : ஊருக்கு வர்றேன்
சுப்பு : எஸ் பாஸ்
செழியன் : சொல்லுங்க நண்பா

பாலாஜி : அட இருங்கப்பா.. சொல்லி முடிச்சுக்கிறேன்.. (சற்று விரைவாக..) வர்ற நவம்பர் 8ம் தேதி மதுரைல நூல் வெளியீட்டு விழா நடத்தனும். நான் தொடர்ந்து பயணத்தில் இருப்பதால விழா ஏற்பாடுகளை என்னால கவனிக்க இயலாது. மதுரை வாசகர் வட்ட நண்பர்கள் எல்லோரையும் வைத்து செய்து முடிக்கணும்.

சுப்பு : பாத்துக்கலாம் பாஸ்
செழியன் : சரிங்க நண்பா...

அதிலிருந்து ஓரிரு நாட்களில் இரு முழுமையான ஆளுமைகளின் கீழ் நான் இருப்பதை என்னால் உணரமுடிந்தது.

ஆளுமை 1 - பாலாஜி பாஸ்கரன்:

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

இந்தக் குறளுக்கு விளக்கம் கூற வேண்டியதில்லை. நான் அரங்கத்திலேயே கூறியபடி இவரது ஆளுமை இவர் என்ன கூறினாலும் செய்து முடிக்க அவருக்கென அமைந்துள்ள நட்புகள் / உறவுகள். அத்தகு ஒத்த இணையான அலைவரிசையைக் கொண்டது அவருக்கும் அவருடைய தோழமைகளுக்குமான உறவு.

அதற்கும் காரணம் தேடும்போது அரங்கிலேயே பலரும் பாராட்டியபடி அனைவரும் வியக்கும்படியான மதிநுட்பமும் நூலறிவும் கொண்டவர் பாலாஜி பாஸ்கரன்.

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.

இப்பொழுது பாருங்கள். மேற்கண்ட இரண்டு குறள்களும் அவருக்கென்றே கனகச்சிதமாகப் பொருந்தியிருக்கிறது. (ஒருவேளை வள்ளுவரும் இவர் நண்பராக இருப்பாரோ...?).

ஆளுமை 2 - மதுரை சுப்பு:

இவர் எஸ்.எஸ்.எஸ் பைனான்சியல் சொலுசன்ஸ் உரிமையாளர், மிகச்சிறந்த நண்பர் - நட்பு என்றால் சுப்பு என்று பாலாஜி அடிக்கடி கூறுவார். நிகழ்வு மேலாண்மையில் முனைவர் பட்டமே கொடுக்கலாம் எனும் அளவிற்கு மிகச்சிறந்த ஏற்பாட்டாளர். திட்டமிடல், ஒருங்கிணைப்பு, செலவு, அவை ஒழுங்கமைப்பு மற்றும் ஒப்பனை, நேர மேலாண்மை என இவர் திறமைகளை நேரில் காணும் வாய்ப்பை இந்த விழா எனக்கு அளித்திருந்தது. இவர் குறிப்பிட்டிருந்த கால அளவீட்டின்படிதான் இந்த விழா குறித்த நேரத்தில் தொடங்கி மிகச்சரியா அச்சுபிசகாமல் குறித்த நேரத்தில் முடிந்திருந்ததுகூட என்னை ஆச்சர்யத்திற்குள்ளாக்கியது.

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்
 - இந்தக் குறள் இவரது மேலாண்மை ஆதிக்கத்திற்கு மிகவும் பொருந்தும்.

மம்மது அய்யவுடன் இனிய சந்திப்பு:

நானும் சுப்புவும் அழைப்பிதழ் வழங்குவதற்காக தம் வாழ்நாளில் பெரும்பகுதியை தமிழிசை ஆய்விற்கென செலவழித்த, தமிழிசை ஆய்வாளர் அன்பிற்கினிய மம்மது அய்யாவை நேரில் சந்தித்தோம். அவரோடு உரையாற்றியதில் உலகின் மூத்த இசை தமிழிசை என்பதை அறிந்துகொண்டதோடு, அதற்கென அவர் செய்த ஆய்வுகள், சங்க இலக்கிய வரைவுகள், சான்றுகள் என பலவற்றை அறிந்துகொண்டோம்.

இசைக்கருவிகள், இசைக்குண்டான விதிகள் பற்றி தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் விரிவாக விளக்கியிருப்பதையும், சிலப்பதிகாரம் கூறும் தமிழ் இசை, பக்தி இலக்கியங்கள் முதல் நாட்டுப்புற இலக்கியங்கள் வரையிலான தமிழ் இசையின் பயணம் குறித்து தெள்ளத்தெளிவாக விவரித்தார். அவர் விவரிக்க விவரிக்க எங்கள் கண்கள் அகல விரிந்தன ஆச்சர்யத்திலும் பெருமிதத்திலும். யாம் பெற்றதை அவையோர் பெறவேண்டுமென விழாவிற்கு அழைத்திருந்தோம். ஆனால் மருத்துவ காரணங்களால் அவரால் பங்குபெற இயலவில்லை என்பது வருந்தத் தக்கதே.

ஆ) விழா நிகழ்வுகள்:

சரியாக 03.40க்-கு அரங்கிற்குள் நுழைந்தேன். தங்கை ரேஷ்மா கூறியதைப் போல மதுரை சுப்பு தலைமையில் நண்பர்கள் சுரேஷ், முத்து இளங்கோவன், சதாம் ஹுசேன் ஆகியோர் வெறும் அரங்கை விழா அரங்காக மாற்றி வைத்திருந்தனர் .

விருந்தினர்கள் ஒவ்வொருவராக அரங்கிற்கு வரவர விழாமேடை அழகுபெறத் தொடங்கியிருந்தது.

நிகழ்ச்சித் தொகுப்புரையின் முதன்மையுரையாகப் பரிபாடலில் கூறப்பட்ட மதுரையின் சிறப்பு பற்றியும், புலம்பெயர்ந்த தமிழர்கள் செல்லுமிடமெல்லாம் மதுரை போன்றதொரு தமிழ் பேசும் நல்லுலகை உருவாக்கியிருக்கிறார்கள் என்றும் தொடங்கி நமது கேலக்ஸியின் உருவாக்கத்தை அண்டங்களின் உருவாக்கத்தோடு ஒப்பிட்டு தங்குதடையற்ற பேச்சால் அவையோரைக் கட்டுக்குள் கொண்டுவந்திருந்தார் அன்புத் தங்கை ரேஷ்மா சதாம் ஹுசேன்.

தொடர்ந்து பேச வந்த நான் கூட்டத்தைக் கண்ட பிரம்மிப்பில் மனதிலுள்ளதைப் பேசாமல் சற்று சமாளித்து வந்ததைப் பேசி வரவேற்புரையை முடித்திருந்தேன்.



"இனி வேறு வழியில்லை வெளியிடப்படும் எல்லா நூல்களையும் நான் தான் வாசித்திருக்கிறேன். எல்லா நூல்களையும் வரிவரியாகச் சரிபார்த்திருக்கிறேன்." என்று தொடங்கியவர் தம் முழுமையான ஆளுமை மூலம் அரங்கையே தன் கட்டுக்குள் மீட்டுக்கொண்டுவந்திருந்தார் பாலாஜி பாஸ்கரன்.

பின்னர் ஒன்றன்பின் ஒன்றாக ஏழு நூல்களும் அறிமுக உரையுடன் வெளியிடப்பட்டது.

- எழுத்தாளர் தெரிசை சிவா எழுதிய 'அயலோன்' நூலைப் பற்றிய அறிமுக உரையை பாலாஜி பாஸ்கரன் நிகழ்த்த, தஞ்சை தமிழ் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறை இணைப் பேராசிரியர் சௌ. வீரலட்சுமி வெளியிட, கேலக்ஸி வாசகர் வட்டத்தின் சதாம் ஹுசேன் பெற்றுக் கொண்டார்.
- எழுத்தாளர் பரிவை சே.குமார் எழுதிய 'உன்மத்தம்' நூலைப் பற்றிய அறிமுக உரையை சதாம் ஹுசேன் நிகழ்த்த, கேலக்ஸி பதிப்பக உரிமையாளர் பாலாஜி பாஸ்கரன் வெளியிட, கேலக்ஸி வாசகர் வட்டத்தின் மதுரை சுப்பு பெற்றுக் கொண்டார்.
- எழுத்தாளர் ரிம்சா ஃபாசீன் எழுதிய 'The Silent Thunder' நூலைப் பற்றிய அறிமுக உரையை பாலாஜி பாஸ்கரன் நிகழ்த்த, TVS Sensing Solutions Pvt Ltd-ன் துணைப் பொது மேலாளர் சபிதா முரளிதரன் பெற்றுக் கொண்டார். எழுத்தாளரின் சார்பாக திரு.பக்கீர் முகம்மது ஏற்புரை வழங்கினார்.
- எழுத்தாளர் வசந்தி முனீஸ் எழுதிய 'விக்டோரியா' நூலைப் பற்றிய அறிமுக உரையை கேலக்ஸி வாசகர் வட்டத்தின் செழியன் நிகழ்த்த, வாஹித்தியார் வெளியிட, கேலக்ஸி வாசகர் வட்டத்தின் முருகேசன் பெற்றுக் கொண்டார். இந்நூலின் ஆசிரியர் வசந்தி முனீஸ் ஏற்புரை வழங்கினார்.
- எழுத்தாளர் 'காப்பியக்கோ' ஜின்னாஹ் ஷரிபுத்தீன் எழுதிய 'இம்மைத் துறக்கம் எழில்மிகு துபை' நூலின் அறிமுக உரையை பாலாஜி பாஸ்கரன் நிகழ்த்த, கலக்கல் ட்ரீம்ஸ் பதிப்பக உரிமையாளர் தசரதன் வெளியிட, டி.வி.எஸ். மேல்நிலைப்பள்ளி மேனாள் ஆசிரியரும், தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவருமான முரளிதரன் பெற்றுக் கொண்டார்.
- எழுத்தாளர் ந. அரவிந்த் எழுதிய 'உடல், குறள், உறைவிடம்' நூலின் அறிமுக உரையை நான் (செழியன்) நிகழ்த்த, பாலாஜி பாஸ்கரனின் தந்தை பாஸ்கரன் சேதுராமன் வெளியிட, மதுரை சௌராஸ்ட்டிரா பள்ளி ஆசிரியர் (ஓய்வு) D.சுந்தரவேல் அவர்கள் பெற்றுக் கொண்டு ஏற்புரை வழங்கினார்.
- கேலக்ஸி சிறுகதைப்போட்டியில் பங்கேற்ற சிறந்த 10 சிறுகதைகள் தொகுப்பான 'பிணையல்' நூலின் அறிமுக உரையை பாலாஜி பாஸ்கரன் நிகழ்த்தி வெளியிட, வெற்றி பெற்றவர்களில் ஒருவரான எழுத்தாளர் அரி கார்த்திக், பதிப்பாளர் சரவண ஜோதி, எழுத்தாளரும் பதிப்பாளருமான ஆமினா முகம்மது, எழுத்தாளரும் திரைக்கதை ஆசிரியருமான கண்மணி ராஜா முகம்மது, பிலிப்பினியன், அசோக்குமார் மற்றும் மதுரை கேலக்ஸி வாசகர் வட்ட நண்பர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

மேற்காணும் ஏழு நூல்களின் வெளியீட்டினிடையே நடந்த நிகழ்வுகளின் துளிகள்:

- எழுத்தாளர் தெரிசை சிவா எழுதிய அறிவியல் புனைவு நூலான 'அயலோன்' குறித்த செய்திகளை பாலாஜி பாஸ்கரன் வழங்கினார். தமிழில் அறிவியல் சார்ந்த புனைவுக்கதைகள் மிக மிகக் குறைவு.
- எழுத்தாளர் பரிவை சே.குமார் எழுதிய உன்மத்தம் - உன்மத்தம் என்பது கலைமேல் கொண்ட வெறியா? ஒரு பரவச நிலையா? - சதாம் உசேனின் அறிமுக உரை சிறப்பானதாய் அமைந்தது.
- பாலாஜி பாஸ்கரன் அறிமுகம் செய்த வெறும் 11 வயதே நிரம்பிய எழுத்தாளர் ரிம்சா ஃபாசீன் எழுதிய "The Silent Thunder" - (அம்புலிமாமா போன்ற மழலைக்கதை அல்ல நண்பர்களே..) மொழியும் ஆன்மீகமும் சொல்லும் அறிவியல் உண்மைகளைக் கொண்ட ஆய்வு - நம்மை ஆச்சர்யப்படுத்துகிறது. ஏற்புரை வழங்கிய திரு. பக்கீர் முகம்மது இவ்வளவு சிறிய வயதில் ஆய்வு ஞானத்துடன் நூலாக்கம் செய்துள்ள தம் மருமகள் குறித்து பெருமிதம் கொண்டார். நமக்கும் ஆச்சரியம்தான்.
- எழுத்தாளர் வசந்தி முனீஸ் எழுதிய சிறுகதைத் தொகுப்பு விக்டோரியா - திருநெல்வேலி மண்ணின் வட்டார வழக்குமொழியில் எழுதப்பட்ட நடப்பு சமூகம் பற்றிப் பேசும் நூல். எழுத்தாளருக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார் நண்பர் பாலாஜி பாஸ்கரன். ஏற்புரையாற்றிய எழுத்தாளர் முனீஸ் - இதை நெகிழ்ச்சிமிகு தருணமாக விவரித்தார்.
- காப்பியக்கோ எழுதிய இம்மைத் துறக்கம் எழில்மிகு துபை - துபையின் அழகு, மண்ணின் மக்கள், வாழ்க்கை முறை, நிர்வாகம் என அனைத்தையும் கூறும் வெண்பா-விருத்தப்பாக்களால் உருவான காப்பியம் - கண்களை அகல விரிக்கும்படிக்கு மேலும் வியப்பூட்டுகிறது.
- எழுத்தாளர் ந. அரவிந்த் எழுதிய உடல், குறள், உறைவிடம் - கட்டுமானப் பொறியியலில் தமிழ் நூல். ஒரு வீடு கட்டுவதற்கு இடத் தேர்வுமுதல் இயற்கைச் சூழல், காற்றோட்டம், கட்டிட நுணுக்கம் எனத் தொடர்ந்து வர்ணம் பூசுதல் வரை திருக்குறளோடு ஒப்பிட்டு எழுதப்பட்ட கட்டடக்கலையின் இலக்கணம். ஏற்புரை வழங்கிய D.சுந்தரவேல், தமிழில் பொறியல் நூல் என்பது வரம் என்றும் கேலக்ஸி ஊக்குவிப்பு குறித்தும் நெகிழ்ந்து பேசினார்.
- கேலக்ஸி சிறுகதைப்போட்டியில் பங்கேற்ற சிறந்த 10 சிறுகதைகள் தொகுப்பான 'பிணையல்' - நிகழ்ச்சியில் எழுத்தாளர் அரி கார்த்திக் மற்றும் தசரதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். எழுத்தாளருக்கு பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தார் நம் பாலாஜி பாஸ்கரன்.

நினைவுப்பரிசுகள்:

எதிர்பாரா நிகழ்வாக நூல் வெளியீடு முடிந்தபின் தினம் ஒரு நூல், கட்டுரை என அனுதினமும் காணொளி வாயிலாக தமிழ்த்தொண்டாற்றும் பாலாஜி பாஸ்கரனுக்கு வக்போர்டு கல்லூரி இமாம். அப்துல் அஸீஸ் வகைதி மற்றும் எழுத்தாளர் கண்மணி ராஜா முகம்மது ஆகியோர் இணைந்து நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தனர். "ஏய் இது எப்புடி நடந்தது...?" என்று ஆச்சர்யத்துடன் பாலாஜி பாஸ்கரன் பெற்றுக்கொண்டார்.




சிறப்பு விருந்தினர்கள் உரை குறித்த துணுக்குகள்:

- தேசிய நல்லாசிரியர் விருதுபெற்ற ஆசிரியர் முரளிதரன் அவர்கள் இன்றைய பயிற்று முறையும், மாணாக்கர்களைத் தயார்படுத்தும் முறைமை குறித்தும் எடுத்தியம்பினார். கொரோனா பெருந்தொற்றுகாலம் ஒரு பயிற்சி காலம் - அது மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களான எங்களுக்கும் என்று தொடங்கியவர் எங்களது வேண்டுகோளுக்கிணங்க விரைவில் அனைவரும் பயன் பெறுவகையில் நூலாகப் படைத்து வழங்குவதாகவும் உறுதி அளித்தார்.

- TVS-ன் துணைப் பொது மேலாளர் சபிதா முரளிதரன் அவர்கள் படிக்கும் காலத்திலிருந்து அன்பு நண்பர் பாலாஜி பாஸ்கரனின் ஆளுமைத்திறன்கள் குறித்து பேசியவர், அமீரக உறவுகள் தங்கள் குழந்தைகளுக்கு தமிழ் படிப்பிக்க இயலாத சூழலில் நமது கேலக்ஸி நிகழ்த்தும் மாதாந்திர கதைப்போமா நிகழ்வின் மூலம் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மழலைகள் மத்தியில் தமிழை விதைப்பதை எடுத்தியம்பி நண்பர் பாலாஜி பாஸ்கரனின் அயராத முயற்சியை வாழ்த்தினார்.

- ஏற்கனவே ஆச்சர்யங்களில் விழிபிதுங்கியிருந்த நம்மை பேராசிரியர் செள.வீரலட்சுமி அவர்கள் மேலும் ஆச்சர்யப்படுத்தினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலையில் மட்டும் 25 வகையான தமிழ்சார்ந்த/தமிழிலேயே படிக்கக்கூடிய படிப்புகள் இருப்பதையும், அதில் அறிவியல் தொழிநுட்பம் சார்ந்த படிப்புகளும் அடக்கம் என்றும், தனக்கு தமிழ்மீதான நெருக்கத்தையும் தமிழால் தாம் பெற்ற பயனையும் தெளிவாக விவரித்தார். வணிகமயமான உலகில் தமிழ் நோக்கி நகரும் நம் முயற்சியைப் பாராட்டினார். மேலும் குழந்தை வளர்ப்பில்கூட வணிகமயம் இருக்கிறது, குழந்தைக்குப் பிடித்ததை படித்தறிய ஒரு பெற்றோராக நாம் வழிவகை செய்து கொடுக்கவேண்டும் என்று கூறியவர் பட்டிணப்பாலைப் பாடலை மேற்கோள்காட்டி சங்க காலத்தில் பெண்களின் ஆளுமை குறித்து அழகாய் எடுத்துரைத்தார்.
- நேர மேலாண்மையால் குறைவாகப் பேசிய கலக்கல் டிரீம்ஸ் பதிப்பாளர் தசரதன் அவர்கள் பாலாஜி பாஸ்கரனுடனான நீண்டகால நட்பை எடுத்துரைத்தார். அதேபோல் பேராசிரியர் கிரிஸ்டோபர் அவர்களும் நட்பு பாராட்டி முடித்துக்கொண்டார்.

- பேராசிரியர் சரவணஜோதி சங்ககாலம் மட்டுமல்ல தற்காலத்திலும் பெண்களின் ஆளுமை குறித்து நகைச்சுவையுடன் பேசி மகிழ்வித்தார். மேலும் பாலாஜி பாஸ்கரனின் சொல்வண்மை குறித்தும் நகைச்சுவை கலந்து பாராட்டினார்.

- வக்பு கல்லூரி இமாம் அப்துல் அஸீஸ் வகைதி அவர்கள் ஆற்றிய உரையில் கடந்தகால மற்றும் தற்கால மாணவர்களின் அறிவு மற்றும் ஒழுக்க நிலைகளை விளக்கி, மாணவச் செல்வங்களின் எதிர்கால வாழ்வே ஆசிரியர்கள் கைகளில்தான் உள்ளது என்னும் எதார்த்தத்தைப் பதிவுசெய்தார். மேலும் நிகழ்கால வாழ்வில் பெண்ணிற்கான ஆளுமைத் தன்மையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

- திரைக்கதை ஆசிரியர், கவிஞர், கண்மணி ராஜா முகம்மது அவர்கள் வீட்டில் மனைவியின் ஆளுமைதான் நம்மை ஆளாக்குகிறது என்று நகைபடப் பேசி மகிழ்வித்தார்.

- நெகிழ்ச்சியின் உச்சத்திலிருந்த பாலாஜி பாஸ்கரன் வரப்போகும் நன்றியுரைக்கு முன்னுரையாக நிகழ்வை வழங்கிய, வருகை தந்து சிறப்பித்த, சிறப்புரையாற்றிய அனைவருக்கும் நன்றி கூறி அகமகிழ்ந்தார்.

பின்னர் எஸ்.எஸ்.எஸ். பைனான்சியல் சொலுசன்ஸ் உரிமையாளர் அன்பிற்கினிய நண்பர் மதுரை சுப்பு என்றழைக்கப்படும் சுப்புரமணி அவர்கள் சுருக்கமாகவும் இனிமையாகவும் வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறி முடித்தார்.

இறுதியாக, தன் கடமையிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து முதலில் சின்னஞ்சிறு உதவிகளுக்கு முரண்பட்டு சலனம் ஏற்படுத்திய அரங்கு ஊழியர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விழா முடியும் நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு “அய்யா நான் இங்கு தினந்தோரும் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அரங்க ஊழியராகப் பணியாற்றியிருக்கிறேன். எந்நிகழ்ச்சியும் இந்நிகழ்ச்சிபோல் இனிதாய் நான் கண்டதில்லை…” என்று அகமகிழ்ந்து நம்மிடம் கூறியபோது பெருமிதம் நெஞ்சில் கூடி மனமகிழ்வை ஏற்டுத்தியது.

ஆமாம். வாசிப்பை நேசிப்பவர்களுக்கும் வாசிப்பையே சுவாசிப்பவர்களுக்குமான யுத்தகளமாய் விளங்கிய இந்த நூல் வெளியீட்டு விழா இரு தரப்பிற்கும் வெற்றியுடன் இனிதே நிறைவடைந்தது.

# 'சிலிர்ப்பு' (தி. ஜானகிராமன்) ஒரு பார்வை (அதர்வு)

**பாலமுருகன். லோ**

**அறிமுகம்**
எழுத்தாளர் தி. ஜானகிராமன் அவர்கள், வறுமையின் கோரப் பிடியில் சிக்கி இளம் வயதிலேயே வேலைக்குத் தள்ளப்படும் ஒரு சிறுமியின் நிலையையும், மனிதநேயம் என்பது குழந்தைகளிடம் குறையாமல் காணப்படுவதையும் 'சிலிர்ப்பு' என்ற இக்கதையில் அழகாக எடுத்துரைக்கிறார். அதே மனிதநேயம், படித்த, பணம் படைத்தவர்களிடம் ஏன் இருப்பதில்லை என்ற ஆழமான கேள்வியையும் இக்கதை எழுப்புகிறது. முகம் தெரியாத நபர்களாக இருந்தாலும், குழந்தைகளிடையே காணப்படும் அன்பு, நேசம், பரிவு போன்ற குணங்கள் மாறாதவை என்பதைத் தன் எழுத்தின் மூலம் தெளிவாக நமக்கு உணர்த்துகிறார்.

**பயணத்தின் தொடக்கம்**
திருச்சிராப்பள்ளியிலிருந்து மாயவரம் செல்லும் தொடர்வண்டி, நடைமேடையில் நின்றுகொண்டிருந்தது. கடைசிப் பெட்டிக்கு அடுத்தாற்போலிருந்த பெட்டியில் தந்தையும் மகனும் அமர்ந்திருந்தனர். பயணத்தின் அசதி காரணமாக, மகன் தன் தந்தையின் மடியில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் பெங்களூரிலிருந்து திருச்சிராப்பள்ளி வந்து, அங்கிருந்து கும்பகோணம் சென்றுகொண்டிருந்தனர். தந்தை, தன் மகனை அவனது மாமன் வீட்டிலிருந்து அழைத்துச் செல்கிறார். தொடர்வண்டி நிலையத்தின் அன்றைய சூழலை எழுத்தாளர் விவரிக்கும்போது, அது இன்றும் மாறாமல் இருப்பது நம்மை சிந்திக்க வைக்கிறது. நாம் இருக்கும் இடத்தை அழகாகவும் தூய்மையாகவும் வைத்துக்கொள்வதில் அனைவரின் பங்களிப்பும் அவசியம் என்பதை இது உணர்த்துகிறது.

**ஒரு சந்திப்பும், சிறுமியின் கதையும்**
அவர்கள் இருந்த அதே பெட்டியில், ஒரு நடுத்தர வயது அம்மையாரும், அவருடன் பத்து வயது சிறுமி ஒருத்தியும் எதிர்ப்புறமாக அமர்ந்தனர். பையனின் தந்தை அவர்களிடம் நலம் விசாரித்தபின், அந்தச் சிறுமியின் பெயர் காமாட்சி (குஞ்சு) என்றும், அவள் தன் பெரிய குடும்பத்தின் வறுமை காரணமாக கொல்கத்தாவிற்கு வேலைக்குச் செல்வதாகவும் அறிந்துகொள்கிறார். தனக்கு நான்கு அக்கா, இரண்டு அண்ணன், ஒரு தம்பி, ஒரு தங்கை எனப் பெரிய குடும்பம் இருந்தும், தந்தையால் அனைவரையும் படிக்க வைக்க இயலவில்லை என்பதை அந்தச் சிறுமி குறிப்பிடுகிறாள்.

**படித்தவர்களின் ஈரமற்ற இதயம்**
"இத்தனை காலம் எங்கே வேலை செய்தாய்?" என்று தந்தை கேட்டபோது, அவள் ஒரு நீதியரசர் வீட்டில் வேலை செய்ததாகக் கூறுகிறாள். ஆனால், அங்கே அவளுக்குச் சம்பளம் எதுவும் கிடையாது; இரண்டு வேளை சாப்பாடும், தீபாவளிக்குப் புதுச் சட்டையும் மட்டுமே கிடைத்துள்ளது. அவள் மெலிந்து காணப்படுவதற்குக் காரணம், அந்த வீட்டில் பாதி நாட்கள் வற்றல் குழம்பு, சுட்ட அப்பளம் போன்ற எளிய உணவையே உண்பதுதான். மூன்றாண்டுகள் வேலை செய்த இடத்திலிருந்து கிளம்பும்போது கூட, அவளுக்குப் 'பழையது'




போட்டு அனுப்பியதை அறிந்தபோது, படித்த, வசதி படைத்த மனிதர்களின் மனதை எண்ணி வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை. உடன் வந்த அம்மையார், "உள்ளம் குளிர வேண்டும் என்பதற்காகப் பழையதைப்போட்டு அனுப்பி வைத்தார்களோ?" என்று கூறும் கிண்டல், அந்தச் சூழலின் அவலத்தை மேலும் அதிகரிக்கிறது.

**மனிதநேயத்தின் சிலிர்ப்பு**
தஞ்சாவூரில் தொடர்வண்டி நின்றதும், சிறுமி பழைய சோறு சாப்பிட்டதை அறிந்த தந்தை, தன் மகனுடன் அவளையும் அழைத்துச் சென்று உணவு வாங்கித் தருகிறார். தாய் இல்லாமல் இருக்கும் அந்த இரண்டு குழந்தைகளும் அவருக்கு அநாதைகளைப் போலத் தோன்றினர். 'அன்னை இல்லையேல் அநாதைதான்' என்ற எழுத்தாளரின் வரி இங்கே நினைவுகூரத்தக்கது. உணவின் காரம் தாங்காமல் அவன் "தண்ணீர்" எனக் கேட்க, காமாட்சி சட்டென ஓடிப்போய் சர்க்கரையை அள்ளி அவன் வாயில் போடுகிறாள். பின்பு சாதத்தைப் பிசைந்து அவனுக்கு ஊட்டுகிறாள். அதுவரை பிடிவாதம் பிடித்த அவன், அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் வந்தது, குழந்தைகளின் கள்ளமற்ற பாசத்தை அழகாகக் காட்டுகிறது.

**முடிவுரை**
கும்பகோணத்தில் இறங்கும் நேரம் வந்தது. தந்தை அந்தச் சிறுமிக்கு ஒரு ரூபாயைக் கொடுத்தார். அடுத்த கணமே, அதுவரை தன் கையில் வைத்திருந்த ஆரஞ்சுப் பழத்தை, சிறுவனின் கைகள் காமாட்சியிடம் நீட்டின. அன்புடன் கொடுத்த அந்தப் பழத்தை அவளும் மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொண்டாள். தன் மகனின் இந்தச் செய்கையைக் கண்ட தந்தைக்கு உடம்பு சிலிர்த்தது. தன் மகனை அணைத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றி, அப்படியே அணைத்துக்கொண்டார். 'அன்பையே, சச்சிதானந்தத்தையே கட்டித் தழுவுகிற ஆனந்தம் அது' என்று திரு. தி. ஜானகிராமன் அவர்கள் கதையை முடித்திருக்கும் விதம், நம் இதயத்தையும் சிலிர்க்க வைக்கிறது. இதுவே இக்கதையின் உச்சம்.

# பாதுகாப்பு

மலர்மதி



ஆகாஷ் தெருவில் இறங்கி பைக்கை உசுப்பி மெயின் ரோட்டுக்கு வந்தான், தூரத்தில் ஒரு சிறு கூட்டம் தெரிய, எதிரே வந்தவரிடம் கேட்டான்.

“சார்… அங்கே என்ன கூட்டம்?”

“ஹெல்மெட் போடாமப் போறவங்களைப் பிடிச்சி ஃபைன் போட்டுக்கிட்டு இருக்காங்க சார்.” என்றவர், “நீங்க ஹெல்மெட் போடாமப் போறீங்க? ஃபைன் கட்டப் போறீங்களா என்ன?” என்று கிண்டலடித்துவிட்டுப் போக, பயந்துபோன ஆகாஷ், ‘சட்’டென பைக்கைத் திருப்பி வீட்டை அடைந்தான்.

“ஹெல்மெட் போடாமப் போனவங்களைப் பிடிச்சி ஃபைன் போட்டுக்கிட்டிருந்தாங்க. நல்ல வேளை நான் துரத்திலிருந்தே கவனிச்சதனால தப்பிச்சேன்.” என்று பெருமையுடன் மனைவி ஷாலினியிடம் சொன்னான் ஆகாஷ்.

“உங்களுக்குக் கொஞ்சங்கூட என் மேலோ, குழந்தைங்க மேலோ அக்கறை கிடையாது. ஃபைன் கட்டலைங்கறதுதான் உங்களுக்கு பெரிய சந்தோஷமான விஷயமா தெரியுது. ஹெல்மெட் போடாமப் போய் அதனால உங்களுக்கு ஒரு ஆபத்துனா அது உங்க பெண்டாட்டி குழந்தைகளுக்கும் ஆபத்துதான். எங்களுக்குப் பாதுகாப்பு கவசமா இருக்கிறவர் நீங்க. உங்களுக்குப் பாதுகாப்பு கவசமா இருப்பது ஹெல்மெட். அதைப் புரிஞ்சுக்குங்க.” என்றாள் ஷாலினி.

மனைவியின் பேச்சில் இருந்த உண்மையைப் புரிந்துகொண்ட ஆகாஷ், உடனே கடைக்குப் புறப்பட்டான் ஹெல்மெட் வாங்க.

# நிஸ்வாவின் நிழலில் –5



## காலத்தைக் கடந்து!!!

இளங்கோ ராமசாமி



"வரலாறு முக்கியம் அமைச்சரே" என்ற 23 ம் புலிகேசியின் வசனம் நகைச்சுவையுலகில் ஒரு மாணிக்கமாய் ஒளிர்ந்தாலும் நிஸ்வா நகரத்திற்கு அதன் வரலாறும் பழமையும் தானே பெருமை? என்னதான் புராதனமான கோட்டையும், பாரம்பரிய கால் நடை சந்தையும், அல் அக்கர் என்ற புதுப்பிக்கப்பட்ட மதிற்சுவரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுத்தாலும் இவற்றை மட்டுமே வைத்து ஓட்டிக் கொண்டிருந்தால் "நீங்கள் என்னத்தைக் கிழித்தீர்கள்?" என எதிர்காலத் தலைமுறையினர் கேட்க இடம் கொடுத்து விடக் கூடாதல்லவா?

அதனால் தான் 80 கோடி ஆண்டுகளாக ஓமான் என்ற நிலப்பரப்பு அடைந்த மாற்றங்களையும், இத்தேசத்தின் மானுட, சமூக மற்றும் அரசியல் வரலாற்றையும், அதன் பாரம்பரியத்தையும், எதிர்வரும் தலைமுறையினரும் கண்டு, ரசித்துப் கற்றுக் கொண்டு சிலாகிக்கும் வகையில் ஓமானின் மிகப்பெரிய அருங்காட்சியகமான "ஓமான் அக்ராஸ் ஏஜஸ் மியூசியம்" என்ற கனவிற்கு 2014 ஆம் ஆண்டு, ஓமானிகளின் பேரன்பிற்குப் பாத்திரமான காலஞ்சென்ற மன்னர் மாண்புமிகு சுல்தான் காபூஸ் பின் சையது அல் சையதால் பிள்ளையார் சுழி போடப்பட்டது. கிட்டத்தட்ட நான்காயிரத்தைனூறு கோடி ரூபாய் செலவில் 2023ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட, மூன்று லட்சம் சதுர மீட்டர்கள் பரப்பளவில் பரந்து விரிந்து கிடக்கும் இந்த அருங்காட்சியகம் மத்தியக் கிழக்கில் உள்ள மிகப்பெரிய வளாகங்களில் ஒன்று. இதனுடைய நிரந்தரக் காட்சியகம் மட்டும் 9000 சதுர மீட்டர்கள் பரப்பளவுடையது. இங்கு காட்சிப் படுத்தப் பட்டிருக்கும் அத்தனை விடயங்களையும் ஒரே நாளில் கண்டு வாசித்து அறிந்து கொள்வது இயலாத காரியம். அதனால் ஓமானில் வசிப்போர் வருடத்தில் ஓரிரு முறையாவது தங்கள் குழந்தைகளுடன் இந்த அருங்காட்சியகத்திற்குச் சென்று வரலாம். சுற்றுலாப் பயணிகள் குறைந்த பட்சம் மூன்று முதல் ஐந்து மணி நேரங்களையாவது இதனைச் சுற்றிப் பார்க்க ஒதுக்குதல் அவசியம்.

இருபது முப்பது வருடங்களுக்கு முன்பு அருங்காட்சியகங்களுக்கு பொது மக்களிடையே ஒரு மதிப்பு இருந்தது. ஆனால் யூட்யூப் மற்றும் சமூக ஊடகப் பெரு வெடிப்பின் காரணமாக எதைப் பற்றியும் எக்கணத்திலும் விரல் நுனியில் தட்டி முப்பரிமாண வடிவில் மெய்நிகர் உண்மையாகக் கண்டு ரசித்துக் கற்றுக் கொள்ளக் கூடிய இந்தக் காலகட்டத்திலும் மக்களை தங்கள் அலைபேசிகளிடம் இருந்து பல மணி நேரம் தங்கள் கால் வலி தெரியாத அளவுக்கு நடக்க வைக்க வேண்டுமெனில் எத்தனை ப்ரயத்தனப் பட வேண்டும்? அந்த நோக்கத்தை நிறைவேற்றத் தேவையான அத்தனை உழைப்பையும் அதற்கு மேலும் கொட்டி பார்த்துப் பார்த்து இழைத்திருக்கும் புத்தாயிரத்தாண்டின் இப்புது வரவு நிஸ்வாவிற்கு மட்டுமின்றி ஓமானுக்கே பெருமை.

மஸ்கட்டில் இருந்து நிஸ்வா வரும் போது "சமைல்" என்ற ஊரைத் தொட்டவுடன் தொலைவில் உங்களோடு வந்து கொண்டிருந்த மேற்கு ஹஜர் மலைத்தொடர் மிக நெருங்கிவந்து உங்களுக்கு அருகாமையில் பயணிக்கத் துவங்கும். அதன் பிரம்மாண்டமும், வண்ணங்களும், அதன் பல வகையான மடிப்புகளும் உங்கள் மனதில் பச்சக்கெனக் கெட்டியாகப் பசை போட்டு ஒட்டிக் கொள்வது உறுதி. பெரும் கழுகு ஒன்றின் கூரிய அலகுகளை அடுத்தடுத்து அடுக்கி வைத்தாற் போன்றோ, அல்லது ப்ரமாண்டமான கூரிய பாறைகள் செதில் செதிலாகக் கிளர்ந்து எழுந்து விண்ணை முட்டிப் பிளந்து விடும் ஆக்ரோஷத்துடன் திமிறிக் கொண்டிருப்பது போலவும் இருக்கும் அச்சிகரங்கள் பத்து ஆண்டுகள் கழிந்தும் இன்று வரை ஒவ்வொரு முறை அவற்றைக் கடக்கும் போதும் எனது கருத்தைக் கவர்ந்து.... "ப்பா எப்டி இருக்கு பாருங்களேன்... சான்ஸே இல்லல்ல. . என்னா அழகு??" என என்னுடன் பயணிப்போரிடம் வாய்விட்டுக் கூவச் செய்கின்றன.

நிஸ்வாவில் இருந்து சலாலா செல்லும் சாலையில் பதினைந்து நிமிடம் சென்றால், இடது புறம் வெண்ணிறத்தில் பாலை மண்ணைப் பிளந்து கொண்டு திமிறிக் கிளர்ந்து நிற்கும் பிரம்மாண்டமான ஓமான் அக்ராஸ் ஏஜஸ் அருங்காட்சியகம் அந்த அழகிய மாபெரும் ஹஜர் மலைத்தொடரை நமது கண் முன் கொணர்ந்து நிறுத்துகிறது.

இக்கட்டிடம் ஓமானின் கரடு முரடான மலைத் தொடர்களையும், கணவாய்களையும் பிரதிபலிக்கும் வகையிலேயே வடிவமைக்கப் பட்டிருக்கிறது. பாலை நிலமான நிஸ்வாவின் தென் பகுதியில் இருந்து கிளர்ந்து எழுந்த மலைத்தொடர் வடக்கு நோக்கி நீள்வதைப் போல இதனை வடிவமைத்துள்ளனர்.

இதன் கட்டுமானப் பணிக்காக ஒரு லட்சத்து முப்பதாயிரம் சதுர மீட்டர்கள் பரப்பளவிற்கான உயர்தர ஓமானி கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வடக்கு அல் பத்தினா மாகாணத்தில் இருந்து தருவிக்கப்பட்ட இக்கற்களே இதன் உள்ளும் புறமும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. இது கடும் கோடை காலத்திலும் அருங்காட்சியகத்தின் உள்ளே சூடு இறங்காமல் பாதுகாக்கிறது. இங்கு வெட்டிப் பயன்படுத்தப் பட்ட கற்கள் போக சிதறிய எச்சங்கள் எதனையும் வீணாகக் குப்பையாகத் தூக்கிக் கொட்டி நிலத்தை மாசு படுத்தாமல் மிகக் கவனமாக அருங்காட்சியகத்தின் வெளிப்புறம் உள்ள பூங்காவை வடிவமைக்கப் பயன் படுத்திக் கொண்டனர்.

இந்த அழகிய பூங்கா ஓமானில் நாம் இயற்கையாகக் காணக்கூடிய தாவரங்களை மட்டுமே கொண்டுள்ளது. அது மட்டுமின்றி பூங்கா நெடுகவும் குறுக்கு மறுக்காக ஃபலஜ் (A falaj ) எனப்படும் சிறிய வாய்க்கால் ஓடுவதைப் போல வடிவமைக்கப் பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாக ஓமானிகளின் வாழ்விலும் புவியியலிலும் ஃபலஜ்ஜுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

அருங்காட்சியகத்தின் வெளிப்புறம் சில இடங்களில் முழுக்க முழுக்கக் கண்ணாடிகளால் ஆனது. அருங்காட்சியகத்தின் முன்பகுதி கிட்டத்தட்ட 25 மீட்டர் உயரம் கொண்டது. நுழைவாயிலில் கால் வைத்தவுடன் விண்ணை முட்டும் கூரையுடன் பரந்து கிடக்கும் ஒரு பெருவெளியின் பிரம்மாண்டம் நமது முகத்தில் அறைந்து நம்மை பிரம்மிக்கச் செய்யும்.

அதனை அடுத்திருக்கும் திறந்த வெளி முற்றத்தின் மையத்தில் ஒரு அழகிய இலைகளற்ற மரத்தின் நவீன சிற்பம் நிறுவப் பட்டிருக்கிறது. அது Frankincense (ஃப்ராங்கின்சென்ஸ்) என்ற சாம்பிராணி மரத்தின் குறியீடாக இருக்கக் கூடும். ஓமானின் சாம்பிராணி மரங்களில் இருந்து எடுக்கப்பட்ட பிசின் உலர வைக்கப்பட்டுப் பல நூற்றாண்டுகளாக கப்பல் கப்பலாக ரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. அந்த நவீன சிற்பத்தைச் சுற்றிலும் எப்போதும் நீர் தேங்கி நிற்பதைப் போல வடிவமைத்திருக்கின்றனர். அதற்குக் கண்ணாடிக் குளம் (Mirror Pool) எனப் பெயர். எந்நேரமும் மேலே நகரும் மேகங்களையும், நிலையாக நிற்கும் அச்சிற்பத்தையும் ஒன்றாகப் பாவித்து அலையாடிக் கொண்டிருக்கும் அக்குளத்தைக் காணும் போதெல்லாம் எனக்கு அது ஓமானிகளின் சலனமற்ற அமைதியான இயல்பைப் பிரதிபலிப்பதாகவே தோன்றும்.

அடுத்ததாக நமது கவனத்தை ஈர்ப்பது அருங்காட்சியக அரங்கங்களின் வாயிலில் நிறுவப்பட்டுள்ள மிகப்பெரிய தேசிய தின LED திரை. 18 மீட்டர் அகலமும் 11 மீட்டர் உயரமும் கொண்ட 198 சதுர மீட்டர் பரப்பளவுடைய பிரம்மாண்டமான





அந்தத் திரைக்கு முன் நின்று அண்ணாந்து பார்த்தால் நமது கழுத்து சுளுக்கிக் கொள்ளும்.

இந்த அருங்காட்சியகத்தின் நிரந்தர அரங்கங்கள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. முதலாவது வரலாற்றுக் காட்சியகம். அங்கு 80 கோடி ஆண்டுகளுக்கு முன் இந்த நிலப்பரப்பு எப்படி இருந்தது என்பது துவங்கி அல் புசைடி என்ற அரச வம்சம் தலையெடுத்தது வரையிலான நிகழ்வுகளை மிக நேர்த்தியாகக் காட்சிப் படுத்தியுள்ளனர். காட்சியகத்தின் சுவர்களும், கூரையும், தரையும் கூட நமக்குக் கதைகளைச் சொல்கின்றன. மிக நேர்த்தியான ஒளியமைப்பும், முப்பரிமாண வடிவங்களைத் தோற்றுவிக்கும் காணொளியரங்குகளும் நமக்கு அவர்கள் சொல்ல வரும் விடயங்களை எளிதில் உள் வாங்கிக் கொள்ள வழி கோலுகின்றன. வாசிப்பு, காணொளி, செயல்முறை என அடுத்தடுத்த அரங்கங்களில் வெவ்வேறு முறைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அம்சங்கள் நம்மைச் சோர்வடைய விடாது பார்த்துக் கொள்கின்றன.

அருங்காட்சியகத்தின் முதற்பகுதியான வரலாற்றுப் பிரிவில் ஒன்பது அரங்குகள் உள்ளன.

நிலவமைப்பு: இப்பகுதி ஓமானின் தனித்துவமான புவியியல் எப்படி உருவானது என்பதை விளக்குகிறது. ஓமானின் பாறைகள், மலைகள், கணவாய்கள், நிலப்பரப்பு என ஒவ்வொன்றின் பின் இருக்கும் பல கோடிக்கணக்கான ஆண்டு கால வரலாற்றை அறிவியல் பூர்வகமாக விளக்குகின்றனர்.



ஆதி மனிதர்கள்: இந்த அரங்கு வேட்டையாடி, பொறுக்கித் தின்று வாழ்ந்து வந்த பேலியோ லித்திக் எனப்படும் கற்கால மனித சமூகத்தில் இருந்து ஓரிடத்தில் குடிசை கட்டி வாழ ஆரம்பித்த நியோலித்திக் எனப்படும் புதிய கற்கால மனித இனத்தின் வரையிலான பரிணாம வளர்ச்சியை அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் மற்றும் பொருட்கள் கொண்டு காட்சிப் படுத்தியுள்ளது. என்னளவில் இதுதான் இந்த அருங்காட்சியகத்தின் மிக முக்கியமான அரங்கு. இங்குள்ள தொல்பொருட்களுக்கு விலை வைக்க முடியாது.

மாகன் நாகரீகம்: இன்றைய ஓமான் மற்றும் ஐக்கிய ஆமீரக நாடுகள் இருக்கும் நிலப்பரப்பில் கிறித்து பிறப்பதற்கு சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்கள் வெண்கலத்தைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். அந்த கால கட்டத்திற்கு வெண்கலக் காலம் என்று பெயர். ஓமானில் அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த மனிதர்கள் மாகன் அல்லது மஜான் என்றழைக்கப் பட்டனர். இப்பகுதி அம்மக்களின் வாழ்வியலைக் காட்சிப் படுத்துகிறது.

கடற் பாரம்பரியம்: ஓமானிகள் மிச்சிறந்த கடலோடிகள். கடல் வழி அவர்கள் மேற்கொண்ட வர்த்தக மற்றும் கலாச்சாரப் பரிமாற்றங்கள் குறித்து இப்பகுதியில் அறிந்து கொள்ள முடியும்.

ஃபலஜ்: ஃபலஜ் என்ற பாரம்பரிய ஓமானின் நீர் பாசன முறையே இன்று வரை வழக்கில் இருக்கிறது. அந்தச் சிறப்பான கட்டமைப்பையும் அதன் வரலாறு குறித்தும் புரிந்து கொள்ள இந்த அரங்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

ஓமானிய அரசு : முதன் முதலில் ஓமான் என்ற பெயர் பெற்ற வரலாறு இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. வெண்கல காலத்திற்குப் பிந்தைய இரும்பு கால வரலாறெனவும் இதனைக் கருதலாம். ஓமானிகள் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பு அவர்களுக்கு இருந்த இறை நம்பிக்கை குறித்தும் இப்பகுதி ஆவணப்படுத்தியிருக்கிறது.



இஸ்லாமிய காலகட்டம் : இந்தப் பகுதியில் ஓமானிகள் இஸ்லாத்தைத் தழுவிய வரலாறு ஆவணப் படுத்தப் பட்டுள்ளது. மேலும் இப்பகுதியில், அந்தக் காலகட்டத்தின் கல்வி வளர்ச்சி, அறிஞர்கள், கடல்வழிப் பயணங்கள் குறித்த தகவல்களும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.
அல் யரூபி வம்சம்: கி.பி. 1624 ஆம் ஆண்டு ஓமானில் அல் யரூபி வம்சத்தின் ஆட்சி நிலை பெற்றது. அந்த அரச வம்சம் மற்றும் ஓமானுக்கு யரூபிகள் அளித்த பங்களிப்புகள் குறித்து இப்பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

அல் புசைடி வம்சம் : இப்பகுதி அல் புசைடி வம்சம் எப்படி ஆட்சியைக் கைப்பற்றி தனது எல்லைகளை விரிவுபடுத்தியது முதல் இன்று வரை எப்படி ஓமானை வழிநடத்தி வருகிறது என்ற வரலாற்றைப் பேசுகிறது.

இந்த அருங்காட்சியகத்தின் Renaissance எனப்படும் மறுமலர்ச்சி அரங்கில் மொத்தம் பன்னிரண்டு பிரிவுகள் இருக்கின்றன. இப்பகுதி 1970 ல் மறைந்த முன்னாள் அரசர் சுல்தான் காபூஸ் அரியணை ஏறிய பிறகு செயல்படுத்திய சீர்திருத்தங்களையும், நாடு எப்படி அரசியல், சமூக, பொருளாதார மற்றும் தொழில் துறைகளில் பெரும் மாற்றங்களை ஏற்றுக் கொண்டு வளர்ச்சிப் பாதையில் வீறு நடை போட்டது என்பதையும் விளக்குகிறது.

இந்த நவீன அருங்காட்சியகத்தில் 80 க்கும் மேற்பட்ட புராதான பொருட்கள் மிக நேர்த்தியாகக் காட்சிப் படுத்தப் பட்டுள்ளன. 310 காணொளிக் காட்சிகள், 1200 உரையாடத் தக்க அம்சங்கள் (Interactive panels) என இங்கு கண்டு களிப்பதற்கும் கற்றுக் கொள்வதற்கும் ஏராளமான விடயங்கள் இருக்கின்றன.

இந்த அருங்காட்சியகத்திற்கு நான் சென்று பல மாதங்கள் ஆகின்றன. இருந்தும் அதன் பெருமைகளாக நான் கருதும் அனைத்தும் எனது மனதில் அழியாச் சித்திரங்களாகப் பதிந்துள்ளன. அரங்குகளைப் பற்றிய விவரங்களுக்காகவும், துல்லியமான எண்ணிக்கைகளுக்காகவும் மட்டும் இணையத்தை நாட வேண்டியிருந்தது.

ஆனால் உங்களுக்காக மீண்டும் ஒரு முறை அனைத்து விவரங்களையும் வாசித்துத் தொகுத்து எழுதியதில் எனக்கு இந்தப் பெரும் அருங்காட்சியகத்தை முழுவதுமாகச் சுற்றி வந்த திருப்தி ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் இந்தக் கட்டுரையை வாசித்து விட்டுக் காலை உணவை முடித்துக் கொண்டு காத்திருங்கள் நான் வந்து உங்களை அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் செல்கிறேன். உள்ளே நுழைந்த பின்பு எனது புலன்கள் அனைத்தும் காட்சிப் படுத்தப் பட்டுள்ள ஆவணங்களில் மட்டுமே குவிந்திருக்கும். அதனால் தான் எனக்குத் தெரிந்த அத்தனை விவரங்களையும் உங்களுக்கு எழுத்தில் வடித்துக் கொடுத்து விட்டேன். இந்தக் கட்டுரை உங்களை ஒரு நல்ல நண்பனைப் போல உங்கள் கரங்களைப் பற்றிக் கொண்டு வழி நடத்தும்.

அனைத்து அரங்குகளையும், வெளிப்புறப் பூங்காவையும் சுற்றிப் பார்த்துக் களைத்த பிறகு நீங்களாகப் “பார்த்தது போதுமப்பா, நடையைக் கட்டுவோம்” என என்னைத் தர தர வென இழுத்தாலொழிய நான் வெளியே வர மாட்டேன்.

அப்படி நீங்கள் என்னை வெளியே தள்ளிக் கொண்டு வந்த பிறகு நான் உங்களை வேறொரு இயற்கை எழில் கொஞ்சும் அழகிய இடத்திற்கு அழைத்துச் செல்கிறேன். சரியா? அதுவரை வரலாற்றின் நினைவலைகளில் புரண்டு கொண்டிருங்கள் நண்பர்களே...

(தொடரும்)

# சுந்தர பவனம்

அ. கௌரி சங்கர்




சுந்தர பவனம் என்ற நாவலை எழுதியிருப்பவர் திருமதி வள்ளி.. திருமதி வள்ளி திருநெல்வேலியில் வசிக்கிறார். இவர் மருத்துவத்துறையில் பணியாற்றி விட்டு ஓய்வில் இருப்பவர். இவருடைய பொழுது போக்கு சிறுகதைகள் மற்றும் நாவல்கள் எழுதுவது. பல நாவல்கள் எழுதி பதிப்பித்திருக்கிறார். இவருடைய பல சிறுகதைகள் பரிசுகளை பெற்று இருக்கின்றன. இந்தப் புத்தகம் ஒரு நோஷன் பிரஸ் வெளியீடு.. அமேசான் கிண்டில் தளத்திலும் படிக்க கிடைக்கிறது.

சுந்தர பவனம் சற்று பெரிய நாவல். கிட்டத்தட்ட 488 பக்கங்கள் மற்றும் 100 அத்தியாயங்கள்.

நாவல் ஒரு நூற்றாண்டில் நடைபெற்ற சம்பவங்களை பற்றி பேசுகிறது. இந்த நாவலில் நூற்றுக்கும் மேற்பட்ட கதாபாத்திரங்கள் உள்ளன. அந்தந்த காலகட்டத்தில், தேவையான கதாபாத்திரங்களை கதைக்குள் கொண்டு வந்து அறிமுகம் செய்கிறார் ஆசிரியர்.

தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள சுந்தர பவனம் என்ற அந்த பெரிய பங்களாவில் கதை ஆரம்பிக்கிறது. 1920 ல் கதை தொடங்குகிறது; 2020 இல் முடிகிறது.

1920 கால கட்டம் அனேகமாக அதிகமாக அனைவராலும் அறியப்படாதது. திருநெல்வேலி சைவ வேளாள குடும்பத்தின் ஒவ்வொரு சடங்கும் ஒரு சரித்திர பதிவாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சடங்கு, திருமணம் என அனைத்து குடும்ப விழாக்களும் பண்டிகைகளும் விவரமாக கதையோடு இணைந்து வருகின்றன. அந்தக் காலத்தில் நடைமுறைகள் எப்படி இருந்தன; உறவு முறைகளுக்கு இடையே இருந்த பாசம், பிணைப்பு கூட்டுக்குடும்பமாக ஒரே தலைமையின் கீழ் இயங்கியது. இவையனைத்தையும் மிக அழகாக சொல்லியிருக்கிறார் ஆசிரியர்.

பண்ணையார் சோமசுந்தரம் - ரத்னாவள்ளி தம்பதி இரண்டாம் தலைமுறை; அவர் தாயார் பெரிய பண்ணையாரின் மனைவி திலகவதி முதல் தலைமுறை - இவர்களின் அறிமுகத்தோடு கதை ஆரம்பிக்கிறது. ஆனாலும் கதையின் நாயகி மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த பண்ணையாரின் மகள் குட்டி திலகவதி தான். கதை அவருடைய பன்னிரண்டாம் வயதில் ஆரம்பித்து 85 ஆம் வயதில் முடிகிறது..

சிறுமி திலகவதியில் ஆரம்பிக்கும் கதை வயதான திலகவதியில் முடியும் போது 85 வருடங்கள் ஓடுவதே தெரியவில்லை. படிக்க ஆரம்பித்ததில் இருந்து முடியும் வரை அடுத்தது என்ன என்ற எதிர்பார்ப்பை வாசிப்பவர்களிடம் உருவாக்கி இருப்பது நாவலின் சிறப்பு. அதே போல இந்த புத்தகத்தில் என்னை கவர்ந்த ஒரு விஷயம் கால மாற்றத்தை திணிக்காமல் கதையின் ஓட்டத்தில் இயல்பாக கொண்டு சென்றிருப்பது அருமை. உதாரணத்திற்கு திலகவதியின் மகன் ஐந்து வயதில் நட்டு வைத்த மரக்கன்று - வளர்ந்து காய்த்திருப்பதாக இயல்பாக கூறுவது, சிறுவன் வளர்ந்து விட்டதை குறிப்பால் உணர்த்துகிறது. கதை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாறுவதை அழகாக எடுத்துச் சென்றிருக்கிறார்.

அந்தக் கால மனிதர்களின் உழைப்புகள், அவர்களிடத்தை கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமித்த மின்சாதனங்கள் மற்றும் அவை உட்புகுந்த கால கட்டத்தை கதையின் ஓட்டத்தில் இயல்பாக கொண்டு வந்திருப்பது சிறப்பு.

குடும்ப கதை என்றாலும் குடும்ப உறவுகளுக்கிடையே உள்ள பிணைப்புகளை கூறும் போது அந்த கால கட்டத்தில் விவசாயத்தை நம்பி இருந்த பண்ணையார் ஜமீன் குடும்பங்கள் மெல்ல மெல்ல காலப்போக்கில் அதிலிருந்து வெளியே வந்து அடுத்த தலைமுறை படித்து வேலை பார்க்க என வெளியிடங்களுக்கு இடம் பெயர, பேரை மட்டும் அந்தஸ்தாக தாங்கி இருக்கும். அது போன்ற மாளிகையை இன்றும் பார்க்கிறோம். இந்தப் புத்தகத்தை படிக்கும்போது அந்த மாளிகைகளிலும் இப்படிப்பட்ட ஒரு கதை இருக்கும் என்றே தோன்றுகிறது..

வசனங்களும் சில இடத்தில் நச்சென்று இருக்கிறது.

## வயதானவர்களுக்கு எதிர்காலமும் பெரிய எதிர்பார்ப்பை தராது. நிகழ் காலமும் நிம்மதியாக கழிந்தால் போதும் என்ற அளவில் ஓடும். இறந்த காலத்தின் இனிய நினைவுகள் மட்டுமே அவர்கள் மனதில் பொக்கிஷமாய் வந்து கொண்டே இருக்கும்.

அது போல இன்னொரு இடத்தில் தந்தையும், மகனும் பேசும் சந்தர்ப்பத்தில் வெளிநாட்டில் வாழும் மகன் அப்பாவை சுந்தர பவனத்தை விட்டு வெளியே வரச் சொல்லும்போது அவர் மகனுக்கு கூறும் பதில் மனதைக் கவர்ந்தது.

## அகிலன் வீடு என்பது வெறும் செங்கலும் சிமெண்டும்னு நீ சொல்ற. நீ வாழ்ற நாட்டுல உள்ளவங்களுக்கு அது பொருந்தும். ஆனால் இந்தியாவில் அப்படி இல்லப்பா. வீடு என்பது உயிரிலும் உணர்விலும் கலந்தது.

## நம்ம நாட்டுல பிள்ளைகளுக்காக பெத்தவங்க வாழ்றத சுமையா நினைக்கல சுகமா தான் நினைக்கிறாங்க; பெரியவங்க கடைசி காலம் வரைக்கும் பிள்ளைகளுக்கு தங்களால் ஆன உதவிகளை செய்யத்தான் செய்கிறார்கள்; இதுபோல உணர்வுபூர்வமான வசனங்கள் ஆங்காங்கே தென்படுகின்றன.

தன் கணவன் தடம் மாறி போவதை உணர்ந்த திலகவதி தன் ஓர்ப்படியிடம் அதைப்பற்றி சொல்லி வருத்தப்படும் போது, இருவரது உரையாடலும் யதார்த்தம். அதேபோல ஒரே வீட்டிற்கு வாழ வந்த அந்த இரண்டு மருமகள்கள் - திலகா, பூரணி இருவருக்கும் உள்ள பாசப்பிணைப்பு கதை நெடுக மனதிற்கு இதமாய் பரிமளிக்கிறது. இறுதி வரை அவர்களிடையே உள்ள ஆத்மார்த்தமான பிணைப்பு கதைக்கு வலு சேர்க்கிறது. அவர்களிடையே நிகழும் உரையாடல்கள் ரசிக்க வைக்கிறன.

## ஒரு பெண்ணுக்கு ஆண் எதிரியாக வேண்டாம் திலகா பெண்ணுக்கு பெண்ணே தான் எதிரி. ஒருத்தன் கல்யாணம் ஆனவன் குழந்தை குட்டி இருக்கிறவன் என்று தெரிந்தும் இன்னொருத்தி வாழ்க்கையை கெடுக்கிறாளே அவளும் பெண் தான் - இதுபோன்ற எதார்த்தமான உரையாடல்கள் கதையுடன் ஒன்ற வைக்கிறது.

வெறும் குடும்ப கதையாக மட்டும் செல்லாமல் விவசாயம், அதைச் சார்ந்த பிரச்சனைகள், நிலங்களை வாங்குவதிலும் விற்பதிலும் ஏற்படும் சிக்கல்கள் அதற்காக வாங்கும் கடன்கள், அதனால் குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள் - என அந்தக் காலத்து பண்ணையார் குடும்பங்களில் நிகழ்ந்த விஷயங்களை இயல்பாக விளக்குகிறது.

மூக்கையா தேவர் பாத்திரப்படைப்பு அருமை. அவருடைய மரணம், அது தொடர்பான மர்மங்கள் என விறுவிறுப்புக்கு பஞ்சம் இல்லாத இடங்கள் நிறைய உண்டு.

அதுபோல அந்தஸ்துக்காக செய்யப்படும் அதிகப்படியான சீர் வரிசைகள் மற்றும் ஆடம்பர கல்யாணங்கள் மற்றும் ஆடம்பரமான குடும்ப விழாக்கள் எல்லாமே ஒரு காலகட்டத்தில் இத்தகைய பெரிய குடும்பங்களின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்து விடும் என்பதை இக்கதை மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

திலகவதி திருமணமாகி சென்னை சென்ற பிறகு கதை இரண்டு இடங்களில் பயணிக்கிறது; சுந்தர பவனம், வசந்த மஹால். அத்தியாயங்கள் இரண்டிலும் மாறி மாறி நிகழ்ந்தவற்றை சுவாரசியமாக கூறுகிறது. வசந்த மஹால் கதாபாத்திரங்களும் சற்று நிறைய இருப்பதாக தோன்றினாலும் ஒவ்வொரு கதாபாத்திரமும் ஒவ்வொரு குணாதிசயம் என்பதால் சுவாரசியமாக செல்கிறது. அது கதை நீட்சிக்கு உதவவும் செய்கிறது. வசந்த மஹால் சென்னையில் இருப்பதால் சென்னையின் வளர்ச்சியையும் பற்றி கால மாற்றத்தோடு சுவாரசியமாக கதாசிரியர் சொல்லியிருக்கிறார்.

அந்த காலகட்டத்தில் இருந்த உண்மையான இடங்களையும் நிகழ்வுகளையும் கதையில் கொண்டு வந்திருப்பதால் கதையோடு ஒன்ற முடிகிறது; ஆசிரியரே தன்னுடைய முன்னுரையில் இதில் உண்மை நிகழ்வு அதிகம், புனைவு குறைவு என்கிறார்.

நான்காம் மற்றும் ஐந்தாம் தலைமுறையும் கதாபாத்திரங்களோடு கால மாற்றத்தையும் உணர்த்துகின்றன. முக்கியமாக முதல் முதலாக டெலிபோன் வீட்டிற்கு வரும்போது ஏற்படும் மகிழ்வு; கடைசி தலைமுறையை 10 அத்தியாயங்களுடன் முடித்து விடுகிறார். ஏனென்றால் அது இப்போது நடக்க கூடிய காலகட்டம். எல்லோரும் அறிந்தது என்பதால்..

இது ஒரு அருமையான சரித்திர பதிவு மற்றும் ஒரு குடும்ப நாவல்; அதுவும் விறுவிறுப்பான திருப்பங்களுடன. புத்தகத்தை எடுத்தால் கண்டிப்பாக கீழே வைக்க முடியாது.. எளிய நடை கதைக்கு கூடுதல் சிறப்பை தருவதாக தோன்றியது. சற்றே பெரிய நாவல் என்றாலும் விறுவிறுப்பு குறையாமல் கதை செல்வதால் அலுப்பு தட்டாமல் படிக்க முடிகிறது. இப்புத்தகம் நோஷன் டிரஸ் தளத்திலும், கிண்டல் தளத்திலும் படிக்க கிடைக்கிறது. அச்சு புத்தகமாகவும் மின் புத்தகமாகவும்.

# எழுதலே வாழ்தல்..!

தமிழ்க்காதலன்

இன்னும் எத்தனை நீதிமான்கள் வேண்டும்?
இன்னும் எத்தனை நீதிக்கதைகள் வேண்டும்?
இன்னும் எத்தனை தீர்க்கதரிசிகள் வேண்டும்?
இன்னும் எத்தனை தீர்க்கதரிசனங்கள் வேண்டும்?

அனுபவத் தொகுப்பை ஆதாரமாக்கித் தந்தால்
ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் தழைத்திருக்க
ஆயிரமா யிரம்பேர் தம்முயிர் இழந்து
ஆனவை யாவும் ஆக்கித் தந்தாலும்

கொள்ளும் தன்மை யற்ற குலமே..!
அல்லும் பகலும் உழைத்து உழைத்து
இந்நிலம் இப்பயிர் இப்பருவ மென்றாய்ந்து
இந்நில மாந்தரெலாம் பசியின்றி புசித்திருக்க

பலகாலம் படாதபாடுப் பட்டுத்தந்த மாநிலம்
பல்லுயிர் பெருக்கம் பண்பாட்டுத் தளம்
நல்லுயிர் வளர்க்க நாளும் உழைத்த
தொல்லுயிர் தொன்மை மறந்தீர் – மாந்தர்

நிலமளந்து நீரளந்து வரம்புக்குள் வைக்க
வாய்க்கால் உயர்ந்து வரப்பும் அணைந்து
நன்செய் புன்செய் விளைவித்து நாளும்
மண்ணுயிர் தழைக்க இன்னுயிர் தந்தார்

காட்டிய வழியெலாம் மறந்தீர்..! அவர்
கட்டிய கனவுக் கோட்டைகள் உடைத்தீர்
ஊட்டிய உணர்வும் அழிந்தீர் – வீணில்
உதறித்தள்ளி பல்வழி பலகாலம் நடந்தீர்

இழிந்தீர் ஈராயிரம் ஆண்டாய் இங்கே
புரண்டு போனது வாழ்க்கை - வந்தார்
மிரட்ட மிரண்டு அரண்டுப் புரண்டு
அடிமைத் தன்மை கலந்துப் பிறழ்ந்தீர்

பிரிந்துப் பிரிந்து வாழ்ந்து வந்தீர்
பிரிவால் உறவின் மூலம் மறந்தீர்
இனம் மானம் மொழி வீரம்
இன்னும் பிறவும் அழியா அடையாளம்

காணீர்..! காணீர்...!! எடுத்துச் சொல்லும்
எவரையும் பழித்தும் இழித்தும் துரத்தும்
பழக்கம் விலக்கி துலங்கும் வாழ்வுக்கு
தோள்கொடு..! போராடும் தலைவன் ஒருவன்

பிறப்பான் பிறப்பான் என்றே ஓய்ந்து
உம்கடமை செய்யாது ஒழிந்து நாளும்
பிறரிடம் கையேந்தும் வாழ்க்கை துறப்பீர்
தன்மானம் தற்சார்பு நிலைக்கட்டும்.



# எதிர்பாராதது...

பாத்திமா ஹம்தா

இன்று விடியகாலை ஐந்து மணிக்கே எழுந்துவிட்டேன். அவசரசமாக காலைக்கடன்களை முடித்துக் கொண்டு என் மேசை முன் அமர்கிறேன். காரணம் இன்று முக்கியமான மீட்டிங் ஒன்றை நடத்துவதாக கூறியிருந்தேன்.

அதனால் அதற்கான முன்னாயத்தங்களை செய்துக் கொண்டிருகிறேன். கடிகாரத்தை பார்க்கிறேன். மணி எட்டை காட்டுகிறது. நேரம் சென்றதே தெரியவில்லை. மேசை மேலிருந்த பைல் கட்டொன்றை ஒரு பக்கமாக அடிக்கி விட்டு அவசரமாக வேலைக்கு செல்ல ஆயத்தமாகிறேன்.

அலமாரியிலிருந்து என் இராணுவ சீருடையை எடுத்து அணிந்துக்கொள்கிறேன். கட்டிலுக்கு கீழிருந்த சப்பாத்தை தேடி போட்டதும் எழுந்து நிற்கிறேன். என் இராணுவ தொப்பியை இறுக கொண்டு அலுமாரி கண்ணாடி முன் நிற்கிறேன். என் சீருடையிலுள்ள ராணுவ இலச்சினை மின்னுகிறது. எனக்கு சமீபத்தில்தான் ராணுவ தலைமை அதிகாரியாக பதவியுயர்வு கிடைத்திருத்தது . இம்மாதத்தோடு நான் இராணுவத்தில் சேர்ந்து ஐந்து வருடங்களாகிறது. அதற்குள் என் வாழ்க்கையில் எத்தனை யோ மாற்றங்கள். நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் பூங்குடில் கிராமத்தில் தான். அதுவொரு வயற்கிராமம். எங்களூரின் பொருளாதாரமே விவசாயத்தை நம்பிதான் இருக்கிறது. தற்போது நான் ஆர்மி ஹாஸ்ட்டலொன்றில் தங்கி தான் வேலைக்கு போய் வந்ததுக் கொண்டிருக்கிறேன் .

அறைகதவு தட்டப்படுகிறது . " யாரது... " என்கிறேன் சத்தமாக .

"சேர் நான் கணேசன் வந்திருக்கேன் ..." மறுபுறத்திலிருந்து பதில் வந்தது .

போய் கதவை திறக்கிறேன். செல்யூட் அடித்துவிட்டு "காலை வணக்கம் சேர்" என்று புன்னகைத்துக் கொண்டே சொன்னான் அந்த ராணுவவீரன் . பதில் வணக்கம் சொல்லிவிட்டு என்ன விடயம் என விசாரித்தேன்.

"சேர் இன்றைக்கு மீட்டிங் வைக்கிறதா சொன்னீங்க... எல்லோரையும் எத்தனை மணிக்கு வரச்சொல்ல..." என்றான் .

என் கைக்கடிகாரத்தை பார்த்துவிட்டு "ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கலாம் . எல்லோரையும் நேரத்திற்குவரச் சொல்லு" என்கிறேன்.

"சரி சேர் " என்றான்.

தலையசைத்தும் அவன் போய் விட்டான். அறைக்கதவை தாழிட்டுவிட்டு திரும்புகிறேன்.

என் போன் சிணுங்குகிறது.

மேசைக்கருகில் போய் போனை எடுத்துப் பார்க்கிறேன்.

"டார்லிங்" என்றிருந்தது. என் காதல் மனைவி சுஸ்மித்தா. ஒருவகை சந்தோஷம் என் இதயத்திலிருந்து புறப்பட்டு உடல்பூராக பரவிச் செல்கிறது .

"ஹலோ டார்லிங்" என்கிறேன் புன்னகைத்தப்படி. மறுபுறத்திலிருந்து அவள் குரல் கேட்கவில்லை. அதற்கு பதிலாக விம்மலுடன் கலந்த அழுகைதான் கேட்கிறது. ஒருகணம் பதறிப்போய் விட்டேன். மீண்டும் மீண்டும் அவள் பெயர் சொல்லி சத்தமாக பேசினேன்.

"என்னங்க அத்தைக்கு ..."என்றுவிட்டு விம்மினாள்.

"சொல்லு சுஸ்மி... எதுக்கு இப்போ அழுவுற.... எனக்கு ஒன்றும் விளங்குது இல்ல" என்றேன் சற்று காரமாகவே.

காரணம் அவன் அழுகை என்னை என்னவோ செய்தது.

"சுஸ்மி... நீ பேசவேணாம்... .என் அம்மாட்ட போனை குடு... என்கிறேன் .

"என்னங்க அத்தைக்கு உடம்பு சரியில்லாம போயிடுச்சு. .. " என்றுவிட்டு விம்மினாள். பெருமூச்சு விட்டப்படி, "அதுதானே டாக்டர் சுஸ்மித்தா பக்கத்திலேயே இருக்காங்களே... இரண்டு மாத்திரை கொடுத்தா எல்லாம் சரியாகிடும்" என்றேன் சிரித்தப்படி .

ஆம் என் மனைவி ஒர் டாக்டர் .

கடைசியாக சென்ற வருடம் தைப்பொங்களுக்கு தான் ஊருக்கு போய் வந்தேன் .

சுஸ்மிக்கு சின்னவயதிலிருந்தே அம்மா கிடையாது . எல்லாம் அவள் அப்பா மட்டும்தான் . அதனால் என் அம்மாவுக்கும் அவளுக்கும் என்றுமே மாமி மருமகள் சண்டை வந்ததேயில்லை .

என் அம்மாவுக்கும் சுஸ்மிக்கும் என்னை நேரில் பார்க்க வேண்டுமென்றால் இப்படியொரு குட்டிநாடகம் போடுவது வழமைத்தான் . ஆனால் சுஸ்மி ஒருபோதும் அழுதுக்கொண்டு என்னிடம் முறையிட்டது கிடையாது .

"அப்போ போனை வைக்கட்டா டாக்டர் " என்கிறேன் நக்கலாக சிரித்தப்படி .

"வேணாம்ங்க நிஜமாகததான் காலையிலிருந்து அத்தைக்கு பேச்சு மூச்சு ஒன்னுமில்ல "

என்னை ஒருவகை பயம் தொற்றிக்கொண்டது.

"உங்க அப்பாகிட்ட போனை கொடு" என்றதுமே உடனே மாமா பேசினார் .

"கோபிக்க வேணாம்ப்பா . லீவு போட்டு விட்டு அம்மாவ வந்து பார்த்துட்டு போயிடு" என்றார் .

"சரி மாமா ..."என்றுவிட்டு அழைப்பை துண்டித்தேன் .



என் அப்பா இறந்து போன பிறகு எங்க குடும்பத்தை தலைதூக்க வைச்சதே எங்கம்மாதான் . அவளுக்கு சுகமில்லை என்றதும் என் உள்ளம் பதறியது. உடனடியாக என் மேலதிகாரி திலீபனிடம் போய் லீவு தரும்படி கேட்டேன் .

யார் லீவு கேட்டபோதிலும் உடனடியாக கையெழுத்தை போட்டு அனுமதி கொடுத்துவிடுவார் . ஆனால் இன்று எதிர்பாராத விதமாக மறுத்து விட்டார்.

"இன்றைக்கு முக்கியமான மீட்டிங் வைக்கிறதா சொல்லிட்டு இப்படி பொறுப்பில்லாம லீவு கேட்டு வரலாமா" என கூறிவிட்டு கண்களையே உற்றுநோக்கினார் . என்னால் அதற்கு பதிலளிக்க முடியவில்லை. மௌனமாக இருந்தேன்.

பின் "பிளீஸ் சேர் . எங்க அம்மாக்கு ரொம்ப சுகமில்ல. காலையில் தான் போன் வந்திச்சு "என பணிவுடன் சொல்லி விட்டு கொஞ்சம் பதறினேன் .

எங்களுடைய லீவு புத்தகத்தை ஒருகணம் நோட்டமிட்டப்படி, " இங்க ஒரு சைன் பண்ணி விட்டு லீவு எடுங்க.."என சொல்லி விட்டு ஒருவிதமாக புன்னகைக்கிறார் .

"இதுவரைக்கும் மேலதிகமாக எந்த லீவும் நீங்க எடுத்ததில்லை .ஆகையால் நீங்க போயிட்டு வாங்க. அடுத்த வாரம் மீட்டிங்கை வைக்கலாம் "என்றார் திலீபன்.

"ரொம்ப நன்றி சேர் " என்றுவிட்டு லீவு புத்தகத்தில் கையெழுத்தை போட்டேன் .

"போயிட்டுவரேன் சேர் "என சொல்ல அவர் தலையசைக்கவும் அந்த இடத்தை விட்டு வெளியேறுகிறேன் .

பாக்கெட்டில் இருந்த என் போன் மீண்டும் சினுங்குகிறது . எடுத்து பார்க்கிறேன் . அந்த அழைப்பு சுஸ்மித்தா விடமிருந்துதான் . அழைப்பை துண்டித்து விட்டு என் அறைக்குள் விரைந்தேன் . என் வருகையை உறுதிப்படுத்துவதற்காக தான் மீண்டும் அவள் போன் பண்ணியிருக்கக் கூடும் .

ஊருக்கு வந்து கொண்டியப்பதாக குறுஞ்செய்தியொன்றை அவளுக்கு அனுப்பி விட்டு அவசரமாக ஆயத்தமாகி ரயில் நிலையத்தை நோக்கி விரைகிறேன். அங்கு சனக்கூட்டம் அதிகமாக இருக்கிறது.

சீக்கிரமாக டிக்கெட்டை வாங்கிக் கொண்டு ஓடிப்போய் ரயிலில் ஏறிக்கொள்கிறேன்.

ரே நடந்து யன்னலோரமாக போய் அமர்ந்துவிட்டேன் . புகையை கக்கிய வண்ணம் பூங்குடில் நோக்கி விரைகிறது ரயில் . என் எதிர்பக்கமாய் ஓடிக்கொண்டிருக்கும் காட்டுமரங்களை கண்டு ரசிக்கிறேன் . என் எதிர்புறத்திலே ஒரு பெண்மணி வந்தமர்ந்தாள் .

இடபற்றாக்குறையினால் தன் இருமகன்களையும் மடியில் வைத்துக் கொண்டாள் . அவளை பார்க்கும் போது என் தாய் ஆனந்தியின் ஞாபகம் வருகிறது. திக்குதிசைக்கு அறியாமல் பயணித்த என் வாழ்க்கைக்கு நேர்வழி காட்டியவள் . முரடனாக இருந்தவனை வீட்டுக்கும் நாட்டுக்கும் சேவைசெய்யும் நற்பிரஜையாக மாற்றியவள் என் தாய் ஆனந்தி . எல்லாவற்றுக்கும் அவள் எல்லையில்லா அன்பும் பொறுமையும் தான் காரணம்.

யன்னலுக்கு வெளியே பார்கிறேன் . என் நினைவுகள் பின்னோக்கி சூழல்கிறன.

அன்று அந்த ஒற்றை தொலைபேசி அழைப்புக்காய் அங்கிருந்தவர்கள் கார்த்துக் கொண்டிருந்த நேரமது. வீட்டுக்குள் அங்குமிங்குமாக நடமாடிக் கொண்டிருந்தான் கார்த்திக் .

அவன் தாயோ தலைவிரிகோலாமாக ஒருபக்கம் சரிந்திருந்தாள்.

"தம்பி கார்த்திக்... ஹோஸ்ப்பிட்டலிருந்து போன் வரயில்லையா?" என்றுவிட்டு உள்ளே வந்தார் ஒருவர்.

"இன்னும் வரயில்லை..." என சொல்லிவிட்டு தன் தாயை பார்த்தான் கார்த்திக். அவள் சிவந்த கண்களும் வீங்கிய கன்னங்களும் அவள் அழுதிருக்கிறாள் என்பதை காட்டியது. கார்த்திக் நடந்தவற்றை ஒருகணம் சிந்தித்து பார்த்தான்.

காலையில் வெகுநேரமாகியும் தம்பி கதிர் கண்விழிக்காததால் பயந்து அவன் தாய் கத்தியழுதாள். இந்த சத்தத்தை கேட்டு ஒடிவந்து பார்த்ததும் அதிர்ச்சியடைந்து விட்டான். காரணம் பேச்சு மூச்சு ஒன்றுமில்லாமல் மல்லாந்து கிடந்தான் கதிர். அதனால் அவசரமாக ஹாஸ்பிட்டலில் கொண்டு போய் சேர்த்தார்கள். கதிர் கண்விழித்ததும் ஹோஸ்ப்பிட்டலில் போன் பண்ணுவதாக சொல்லியிருந்தார்கள்.

கதிர் பிறந்த கொஞ்சநாட்களிலே கார்த்திக்கின் அப்பா எதிர்பாராத விதமாக மாரடைப்பினால் இறந்துப்போனார். இதனால் கார்த்திக்கின் தாய் குடும்பசுமையை தாங்க முடியாது மிகவும் கஷ்டப்பட்டாள். ஆடைதொழிற் சாலை ஒன்றில் வேலை செய்தே தன் பிள்ளைகளை வளர்த்து வந்தாள் . சிலநேரம் ஒருவேளை உணவுக்கே கஷ்டப்படும் நிலை காணப்பட்டது. ஆனாலும் அவன் தாய் தன் பிள்ளைகளை நன்றாக படிக்க வைத்தாள்.

கார்த்திக் சாதாரண தர பரிட்சையில் நன்கு சித்தி பெற்ற போதிலும் உயர்கல்வியை அவனால் தொடர இயலவில்லை .காரணம் அவன் தாய் திடீரென நோய்வாய்பட்டாள் . இதனால் குடும்பசுமையை கார்த்திக் ஏற்க வேண்டியிருந்தது. இதனால் பல இடங்களுக்கு வேலை கேட்டு போனான் .

இதன் காரணமாக அவன் பல்வேறு இன்னல்களுக்கும் அவமானங்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டது. அந்த சமயம் அவன் தந்தையின் நண்பர் என அறிமுகமானார் ஒருவர். முன்அறிமுகமில்லாத அந்த நபரின் நட்பு கார்த்திக்கை தப்பான ஓர்பாதையில் இட்டுச் செல்லக்காரணமாக அமைந்தது .

பின் சிலமாதங்களுக்குளேயே கார்த்திக் நன்றாக சம்பாரிக்கத் தொடங்கி விட்டான் .

"அம்மா நீ இனி திரும்ப வேலைக்கு போக வேண்டியதில்லை . நானே எல்லா செலவு களையும் பார்த்துக் கொள்வேன்" என தன் தாயிடம் கூறினான் கார்த்திக்.

அன்றிலிருந்து காத்திக்கின் செலவிலே குடும்பம் நகரத்தொடங்கியது. சிலநாட்களில் வாடகை வீடு சொந்த வீடாக மாறியது. அத்தோடு பல்வேறு விதமான புதிய பொருட்கள் வீட்டை அழகுப்படுத்தின. பதினேழு வயது தன் மகனுக்கு இவ்வளவு பணம் எப்படி வருகிறது. ஒரு கணம் சிந்தித்தாள் அந்த தாய். ஆனால் இதை பற்றி அவனிடம் துருவி விசாரிக்க அவளுக்கு சற்று தயக்கமாகவே இருந்தது.

அன்று காற்பந்து விளையாடியபடி வீட்டுக்குள் வந்தான் கதிர் . பாதிதிறந்த அறை கதவு வழியாக கார்த்திக் தன் அறைக்குள் ஏதோ வேலை செய்து கொண்டிருப்பது வெளியே தெரிந்தது .

கதிர் பந்தை கைகளால் நிலத்தில் அடித்து விளையாட அதுதவறி கார்த்திக்கின் அறைக்குள் போய்விட்டது .

உடனே கதிர் தன் அண்ணனின் அறைகதவை நன்றாக திறந்துக் கொண்டு உள்ளே போனான் ."எத்தணை தடவை சொல்லி இருக்கேன் . என் ரூம்க்குள் வர வேணாம்ன்னு " என கார்த்திக் சத்தமாக கத்தினான் . உடனே பயந்தபடி தன் கண்களால் பந்தை காட்டினான் கதிர் . " எடுத்துட்டு போ ..." என்றுவிட்டு அவன் போனதும் அறைகதவை "தடால்.." என அடைத்துவிட்டான் கார்த்திக் .

கதிர் அந்த அறையை விட்டு வெளியே வந்த போதிலும் தன் அண்ணன் கையில் உள்ள இனிப்பு பண்டபெட்டி அவன் மனதை விட்டு அகலவில்லை .

தொலைபேசி சினுங்க கார்த்திக் போய் எடுத்து " ஹலோ ..." என்றான் .

"நாங்க ஹாஸ்ப்பிட்டலிருந்து பேசுறம்" என மறுபுறத்திலிருந்து பதில் வந்தது.

" சொல்லுங்க . நான் கதிரோட அண்ணன் பேசுறன் "என்றான் கார்த்திக்.

தலைவிரிகோலமாக இருந்த அவன் தாய் ஓடிவந்து அவனருகே நின்று கொண்டாள். "கதிர் அளவுக்கதிகமாக போதைமாத்திரை சாப்பிட்ட காரணத்தினால் அவரை எங்களால் காப்பற்ற இயலவில்லை"

"என்ன சொல்லுறீங்க..." என பதறினான் கார்த்திக். "ஆமா உண்மைதான் . ஆனால் அவர் பாடியை பொலிஸ் விசாரனைக்கு பிறகுதான் வீட்டுக்கு அனுப்புவாங்க" என்றுவிட்டு அந்த அழைப்பு துண்டிக்கப்பட்டது. கார்த்திக்கின் தலை ஒருகணம் சுற்றியது.

"பத்து வயசு பையன் எப்பிடிடா போதை மாத்திரை சாப்பிட்டான். உண்மையை சொல்லு..." என கார்த்திக்கின் சேட்டை பிடித்து ஆட்டினாள் அவன் தாய். கார்த்திக் மௌனமாக இருந்தான்.

கார்த்திக்கின் தாய் தலையை பிடித்தப்படி மயங்கி விழ அங்கிருந்த பெண்கள் அவளை தாங்கி பிடித்துக் கொண்டனர். கார்த்திக்கின் மனம் உருத்தியது . காரணம் தான் விற்பனை செய்ய வைத்திருந்த போதைமாத்திரை கதிர் இனிப்புபண்டமாக நினைத்து அளவுக்கதிகமாக சாப்பிட்டிருக்க வேணும். தன் அறைக்குள் விரைந்தான் கார்த்திக் .

கட்டிலுக்கு கீழ் தான் வைத்திருந்த பெட்டியை எடுத்து திறந்தான் . அவன் ஊகம் சரியாய் போய்விட்டது . பெட்டிக்குள் இரண்டு மாத்திரைகள் மட்டுமே எஞ்சியிருந்தன . தான் செய்த பெரிய பிழை தன் உடன்பிறப்பின் உயிரையே பறித்து விட்டது .அவன் கண்கள் கலங்கின. அவனால் அதை ஜீரணிக்க முடியவில்லை . அதற்கிடையே வேகமாக பொலிஸ் ஜீப்பொன்று வந்து வீட்டுவாசல் முன் நின்றது . அதிலிருந்து



தடதடவென நான்கைந்து பொலிஸ்காரர்கள் வீட்டை சுற்றிக் கொண்டார்கள் . கார்த்திக்கின் தாயை பார்த்து "அம்மா விசாரணைக்கு பிறகு குற்றவாளி கண்டுபிடிக்கப்பட்டதும் தான் உங்க பையனோட பாடி வீட்டுக்கு வரும் " என்றார் தலைமை பொலிஸ் அதிகாரி .

கார்த்திக்கின் வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டது. அவன் அறையிலிருந்து சில போதைமாத்திரைகளுடன் வெளியே வந்தார் பொலிஸார் ஒருவர். அவன் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் கார்த்திக்கின் கரங்களுக்கு விலக்கிடப்பட்டன.

தன் உடன்பிறப்பின் உயிரை பறித்தற்கு மேலாக அவனின் இறுதிச்சடங்கு கூட என்னால் தடையாக இருக்க முடியாது என தன் தாய் முன்னே கார்த்திக் பொலிஸரிடம் கைகளை நீட்டி தன் குற்றத்தை ஒப்புக் கொண்டான் .

"என்னை மன்னிச்சுடும்மா ...பெரிய தப்பு பண்ணிட்டேன் "என்றதுமே அவன் கண்கள் கலங்கி கண்ணீர் துளிர்த்தது. "கார்த்திக் உங்கப்பா நேர்மையாக கூலிதொழில் செய்தே குடும்பத்தை காப்பாத்தினாரேடா... நீ எங்க குடும்ப மானத்தையே வாங்கிட்ட" என தன் தலையில் அடித்துக் கொண்டாள் கார்த்திக்கின் தாய் .

சுவரில் மாட்டியிருந்த அப்பாவின் உருவப்படத்தை பார்த்தான் . அவன் கண்கள் குளமாகின. ஆடம்பரமாக வாழ ஆசைப்பட்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டோமே என உள்ளம் நோந்தான். பொலிசார் கார்த்திக்கை ஜீப்பில் ஏற்றவும் கதிரின் சவப்பெட்டி சுமந்த அம்பூலன்ஸ் வீட்டுக்கு வரவும் நேரம் சரியாய் இருந்தது .

.கார்த்திக் ஆறுமாதகாலமாக சிறையில் இருந்தான். அவன் விதவை தாய் ஒரு மகனை இழந்ததிருந்தாலும் மற்றவன் உயிரோடு இருக்கிறான் என்ற நினைப்பு மட்டுமே அவளை ஆறுதல்படுத்தியது. அதனால் அடிக்கடி கார்த்திக்கை பார்க்க சிறைச்சாலைக்கு சென்று வந்தாள் .

வழமைபோல அன்றும் அவனுக்கு சாப்பாடு செய்து எடுத்து வந்திருந்தாள் . அடிப்பட்டு நிலத்தில் சுருண்டு படுத்திருந்தான் கார்த்திக். "உங்கம்மா வந்திடுங்காங்க. போய் பாரு" என தன் கம்பினால் கார்த்திக்கின் முதுகை தட்டினார் பொலிஸாரொருவர். அவன் மெதுவாக எழுந்து தன் தாயருகே போனான்.

"கார்த்திக்.என்னடா முகம் இப்பிடி கறுத்து போயிருக்கு " என இருவருமிடைபே இருந்த கம்பியை பிடித்தப்படி கேட்டாள் ஆனந்தி . இன்னும் தன்மேல் அவள் வைத்திருக்கும் பாசத்தை கண்டு வியந்தது அவனுள்ளம் .

"வேணாம்மா ... நீ இனி இங்கு வர வேணாம் . உன்னை இதுக்கு மேல கஷ்டப்படுத்த நான் விரும்பல "என சொல்லிவிட்டு தலை குனிந்தான் .

"என்ன குற்றம் செஞ்சாலும் நீ என்றைக்கும் என் பிள்ளைதான். உனக்கு வயசா போயிடுச்சு. யாருடைய காலை பிடிச்சாவது உன்ன வெளியில் எடுப்பன் கார்த்திக், ஆனா நீ மறுபடியும் படிக்கணும். படிச்சதுக்கு அப்பறம் கிடைக்கிற வேலைய தான் நீ செய்ய வேணும் " என அவன் தாய் உத்தரவிட அதற்கு அவனும் உடன்பட்டான்.

அதன்பிறகு தான் வேலை செய்த ஆடைதொழிற்சாலை கம்பனி முதலாளிடம் போய் கடனுக்கு ஒரு தொகை பணம் கேட்டாள் . "உன்ன நம்பி எப்படியம்மா ஒரு லட்சம் பணத்தை

கொடுக்குறது" என முதலாளி வினவ மௌனமாக இருந்தாளவள். பின் தன் தங்கத்திலான தாலியையும் தோடுகளையும் கழற்றி மேசை மேல் வைத்தாள் .

"காசு முழுவதையும் கட்டினா பிறகு இதை எடுத்துக்கிறேன் முதலாளி" என பணிவுடன் சொன்னாள்.முதலாளி ஒரு கணம் சிந்தித்து விட்டு "அதை எடுங்க . அது உங்ககிட்ட இருக்கட்டும் . இந்தாங்க நீங்க கேட்ட காசு " என ஒரு லட்சம் பணத்தை நீட்டினார்.

பல வருடங்களாக அவள் அதே கம்பனியில் வேலை செய்தமையாலும் மனிதாபினத்தோடும் அவர் அந்த பணத்தை அவளுக்கு கொடுத்தார்.

"ரொம்ப நன்றிங்க. காசை விடவும் நீங்க செய்த உதவி பெரிசு" என்றுவிட்டு தன் மகனை சிறைச்சாலையில் இருந்து மீட்கச் சென்றாள் அந்த தாய் .

சில காலங்கள் உருண்டோடின . கார்த்திக் உயர்தரத்தில் கற்று சிறந்த மதிப்பெண்களை பெற்றான் . இதனால் அவன் இராணுவ பல்கலைகழகத்திற்கு தெரிவானான் .

"அம்மா லீவில் வந்ததும் ஏதாச்சும் வேலை பார்க்கலாம்டு நினைச்சன். நீ விட மாட்டீங்கிறீயே..." என அலுத்தபடி கூற, "வேணாம் ராசா. அம்மா பார்த்துறன். நீ படிச்சு முடிச்சதும் வேலைக்கு போ " என்றபடி அவன் தலைமுடியை ஒரு பக்கமாக படிய வாரிவிட்டாளவள்.

"ஆறு மாசமா கேம்பஸ் போய் வந்துட்டு இருக்க . இன்னும் ஒரு பொண்ண பார்க்கலாடா " என்றுவிட்டு சிரித்தாள் கார்த்திகின் தாய் .

"நீயாம்மா இப்பிடி கேக்குற..." என தன் புருவங்களை உயர்த்தினான்.

"ஏன்டா உனக்குன்னு ஒரு துணை வேணாமா " என்றாள் .

கார்த்திக் போனில் ஏதோ துலாவியப்படி "பார்க்கலாம் . ஆனா உனக்கும் பிடிச்சாதான் கட்டிகுவன் " என கூறியப்படி பின்னால் இருந்து அவள் தோளை கட்டியணைத்துக் கொண்டான். "சரி விடு கார்த்தி .. " என செல்லமாக கூறியபடி அவன் கரங்களிலிருந்து நழுவி சமையறைக்குள் புகுந்தாள் .

கார்த்திக் விடுமுறை முடிந்ததும் மீண்டும் பல்கலைகழகத்திற்கு சென்றான் . இரண்டு நாட்களின் பின் வைத்திய பீடத்தில் கற்கும் தன் உயிர்தோழன் சசிகுமாரை சந்திக்கப் போயிருந்தான் .

"ஹாய்டா சசி ... "

"ஹாய் கார்த்திக் என்னடா இந்த பக்கம்... " என கூறியப்படி அருகே வந்தான் சசிகுமார்.

"சும்மா உன்ன பார்த்துட்டு போகலாம்ன்னு வந்தேன்" என்றுவிட்டு அங்குமிங்குமாக பார்த்தான் கார்த்திக் .

"என்னை பார்க்கணும் வந்த . ஆனா வேற யாரையோ உன் கண் தேடுதே " என சிரித்துக்கொண்டே கூறினான் சசி .

"அது... வந்து..." எனும் போதே, " வா கார்த்திக் அங்க போய் பேசுவம்" என ஒரு பூந்தோட்ட பக்கமாக அழைத்துக் கொண்டு போனான் சசிக்குமார் . இருவரும் அங்கிருந்த படிக்கட்டொன்றில் உட்கார்ந்துக் கொண்டார்கள்.

"உன்ன ஒருமுறை பார்க்க வந்த போ இங்க ஒரு பொண்ண பார்த்தேன்டா " என்ற கார்த்திக், அவளை பற்றி தன் நண்பனிடம் விபரித்தான்.

"ஓ... அந்த பொண்ணா...அவ பேரு சுஸ்மித்தா. நல்லபொண்ணு. போய் பேசி பாருடா" என கார்த்திக்கை உற்சாகபடுத்தினான் சசிகுமார்.

"இல்லடா கொஞ்சம் தயக்கமா இருக்கு . பிறகு ஒருநாள் அந்த விஷயமாக பார்க்கலாம் "என்றான் கார்த்திக் .

ஓரிரு மாதங்களுக்கு பின் சுஸ்மித்தாவை கார்த்திக் காண நேரிட்டது. சீனியர் மாணவர்களிடம் மாட்டிக் கொண்டு தவித்தாள் சுஸ்மித்தா . இதுதான் சரியான தருணம் என எண்ணியவனாக அவர்கள் பக்கமாய் போய் விசாரித்தான் .

"விக்னேஷ் ... என்ன பிரச்சினை.."என்றான் . "வாடா கார்த்திக் இந்த பொண்ணு கையில ஐநூறு ரூபா வைச்சிருக்கு . கேட்டா தரமாட்டேங்குது " என விக்னேஷ் முறையிட்டான் .

இப்படி போவோர் வருவோரிடம் இடைமறித்து பணம் கேட்டு வாங்கி தின்பது விக்னேஷினதும் அவன் நண்பர்களிதும் வழக்கம் .இன்று சுஸ்மித்தா வசமாக மாட்டிக் கொண்டு விட்டாள் .அதுவும் கையிலே பணத்தை வைத்துக் கொண்டு தரமாட்டேன் என்றால் நம்ம பையன்கள் விடுவான்களா . சுஸ்த்தா தன் கையில் வைத்திருந்த புத்தகங்களை பிடுங்கி கொண்ட கார்த்திக், "பணத்தை அவன்களிடம் கொடு " என அவளை மிரட்டினான்.

ஒருகணம் அவள் முகமே மாறிவிட சீக்கிரம் பணத்தை கொடுத்து விட்டாள் . அதன்பின் விக்னேஷும் அவன் நண்பர்களும் போய் விட்டார்கள் . ஒரு கையில் அவள் புத்தகங்களை வைத்துக் கொண்டு மறுகையால் அவள் மென்மையான கரங்களை பற்றிக் கொண்டு சிறிது தூரம் நடந்தான் கார்த்திக்.

" கையை விடுங்க கார்த்திக்"

"என் பேரு எப்படி தெரியும்?"
"அதுதான் உங்க கள்ளகூட்டம் பேர் சொல்லி கூப்பிட்டாங்களே "என நக்கலாக சென்னாள்.

"மரியாதையா பேசுங்க " என்றுவிட்டு தனது ஐநூறு ரூபாய் நோட்டை அவள் புத்தகதிற்குள் செருகி வைத்தான் கார்த்திக் .

அவளிடம் புத்தகங்களை கொடுத்துவிட்டு திரும்பி பாராமல் போய்விட்டான். அப்போது கார்த்திக் செருகிய நோட்டு கீழே விழவும் அதை கணநேரமாய் பார்த்துக் கொண்டிருந்தாள் சுஸ்மித்தா. இந்த சம்பவத்திற்கு பின்னால் சுஸ்மித்தாவின் மனதில் இடம் பிடித்துக் கொண்டான் கார்த்திக்.

இதனால் பாடநேரம் தவிர மற்றைய பொழுதெல்லாம் வைத்திய பீடத்திலே காலம் கழித்தான் கார்த்திக் . அவர்களின் காதல் பயணத்தில் இடையிடையே பல முரண்பாடுகள் தோன்றி சிறு சிறு விரிசல்கள் ஏற்படலாயின . ஆயினும் அது அவர்கள் காதலை அதிகரிக்கச் செய்ததே தவிர பிரிவை ஏற்படுத்த வில்லை .

கார்த்திக்கிற்கு வேலைக்கிடைத்ததும் தன் தாய் ஆனந்தி சகிதம் சுஸ்மித்தாவின் தந்தையை சந்திக்கச் சென்றான் . ஒரே மகள் என்பதால் சுஸ்மித்தாவிற்கு சம்மதம் என்றால் தனக்கும் இஷ்டம் என்றுவிட்டார் . இதனால் அவ்விருவருக்கிடையே இனிதே திருமணம் முடிந்தது.

கார்த்திகின் வாழ்கை மகிழ்ச்சியடையக் காரணம் ஒன்று அவன் தாய் மற்றவள் அவன் தாரம்.

"கிறீச்..." என்ற சத்ததுடன் ரயில் நிற்கவும் என் கடந்தகால நினைவுகள் கலைந்தன.

ரயிலிருந்து ஒவ்வொருவராக இறங்கிக் கொண்டிருந்தார்கள் . என் காதல் மனைவி சுஸ்மியையும் அம்மாவையும் பார்க்கும் ஆர்வத்தில் என் மனம் துள்ளிக்குதித்தது . ரயிலிருந்து குதித்து கீழே இறங்கினேன் . எங்கிருந்தோ வீசிய குளிர்காற்று என் மேனி வருடியது .

கலைந்திருந்த என் கேசத்தை ஒரு பக்கமாக என் கரங்களால் படிய வாரி விடுகிறேன். அடிக்கடி என் தாய் ஆனந்தி தன் கரங்களால் இப்படி வாரிவிடுவது வழக்கம் . அதுவே என் பழக்கத்திற்கு வந்துவிட்டது . ஏனோ அவள் முகம் இன்று அடிக்கடி நினைவில் வந்த போகிறது . ரயில் நிலையத்திலிருந்து வெளியேறி நடைபாதையோரமாக போய் கொண்டிருக்கிறேன் . வீதியில் ஆட்டோவொன்று போக கையசைத்து அதை நிறுத்துகிறேன் .

"எங்க போகணும் தம்பி." என ஆட்டோக்காரர் கேட்டதும் என் வீட்டு முகவரியை சொன்னேன் . "அங்கேயா அப்போ ஏறுங்க " என்றார் . ஆட்டோக்கார் பக்ககண்ணாடி வழியே என்னை அடிக்கடி பார்க்கிறார். அதை நான் புரிந்துக்கொண்டதும் "உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கு தம்பி" என்கிறார் .

" நானும் இந்த ஊர்காரன்தான் . ஆர்மியில் சேர்ந்ததிலிருந்து நாற்பதுநாள் லீவுக்கு மட்டும்தான் ஊருக்கு வந்துட்டு போவேன் "

"நீங்க ஆர்மின்னு சொல்லும் போதுதான் எனக்கு ஞாபகம் வருது . பூங்குடில் பள்ளியில் உங்க போட்டோ ஒட்டிருக்கு . அதனால் தான் எங்கோ உங்கள பார்த்த ஞாபகம் "என ஆட்டோக்காரர் சொன்னதும் என் மெய்சிலிர்த்து போகிறது. மௌனமாக இருந்தேன் .பின் "உண்மையாகவா.." என்கிறேன் .

"ஆமா தம்பி எங்க பள்ளில படிச்சு நல்ல பதவில் இருக்கிறவங்க எல்லோரையும் போட்ட ஒட்டியிருக்காங்க " என்றார்.

ஆட்டோ நான்படித்த பாடசாலையை கடக்கையில் அவர் சொன்னது உண்மை என்பதை நேரிலே கண்டுக்கொண்டேன் . என் தாயை எண்ணி உள்ளுக்குள்ளே அவளுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன் .

"அண்ணா இங்க நிறுத்துங்க " என்றுவிட்டு இறக்குகிறேன் . என் பையை தோளில் போட்டப்படி பணத்தை கொடுத்ததும் மீதிபணத்தை நீட்டினார் ஆட்டோக்காரர் .

"அதை நீங்களே வைச்சிகங்க" என்றுவிட்டு அப்போது தான் என் வீட்டுபக்கம் திரும்பி பார்கிறேன் . இரண்டு அடுக்குமாடி வீடு . என் கனவுகளை நிஜமாகிய என் தாயை பார்க்க விரைகிறேன் . வீட்டு முன்னே சனக்கூட்டம் ஆங்காங்கே கதிரைகளில் அமர்ந்தபடியும் நின்றபடியும் ஏதேதோ கதைக்கொண்டிக்க

"சுஸ்மி.." என்றபடி முன்வாயில் வழியே வீட்டுக்குள் நூழைந்தேன். நூழைந்ததும் தான் தாமதம் உள்ளேயிருந்து "கார்த்திக்..." என கத்தியழுதப்படி சுஸ்மி ஓடிவர கிட்ட போய் அவளை கட்டியணைத்துக் கொண்டேன் .

அங்கே பெரும் சலசலப்பு ஏற்பட்டது. "கார்த்திக் அத்தை எங்களை விட்டுட்டு போயிட்டாங்க.."எனும் போதே எனக்கு விஷயம் விளங்கி விட்டது . அவளை அணைத்தப்படி உள்ளே சென்றேன் . என் வீரத்தாய் வெள்ளை போர்வைக்குள் கண்களை இறுக மூடியப்படி தூங்கியிருந்தாள் . ஓடிப்போய் அவள் காலை பிடித்தப்படி கனநேரமாய் அழுதேன் . என் பதவிபட்டமெல்லாம் மறந்து நிலத்தில் அப்படியே வெகுநேரமாய் உட்கார்ந்திருந்தேன் .

"என் தாயின் இறுதிமூச்சு விட முன்பாவது அருகில் இருக்க ஆசைப்பட்டேன். நீ போன் பண்ணியிருக்க கூடாதா?" என சுஸ்மியுடன் வேண்டுமென்றே சண்டை பிடித்தேன் .

"உங்களுக்கு இரண்டாவது முறை போன் பண்ணவும் நீங்க தான் கட் பண்ணிட்டீங்க" என்றுவிட்டு விம்மினாள் .

போன உயிரை அவளால் பிடித்து வைக்கதான் முடியுமா ஆனாலும் சுஸ்மியுடன் பேசாமல் மௌமாக இருந்தேன் . அம்மா இறந்து இன்றோடு நான்கு நாளாகிறது . சுஸ்மியுடன் பேசும்படி மாமா எத்தனை தடவை சொல்லிட்டு போனாலும் கட்டிலில் சாய்ந்தபடி பேசாமல் இருக்கிறேன் . சுஸ்மி என்னை பார்த்தப்படி " என்னங்க ஒரு விஷயம் சொல்லனும்" என்றாள் . மௌனமாக இருந்தேன் . கட்டிலில் மறுகரையில் மெதுவாக அமர்ந்தாள்.

பின் மீண்டும் "என்னங்க..." என அவள் பேச , "பேசாம இங்கிருந்து போடி...." என கர்ஜித்தேன் . கட்டிலில் இருந்தப்படி மேசை மேலிருந்த பொட்களை கீழே வீசி எறிதேன்.

அவள் அழுதுக்கொண்டே போய் விட்டாள். வாழ்க்கையில் எத்தனையோ எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படதான் செய்யும். அதனால் எதற்கும் தைரியமாக எதிர்கொள்ள வேணும். என் தாயின் இறப்பு இயற்கையானது. அதனால் சுஸ்மித்தாவுடன் முரண்படுவது முறையல்ல. ஆகவே அவளை சமாதானப்படுத்தினேன்.

அடுத்த நாள் காலைவேளை என் லீவு முடிந்த காரணத்தினால் வேலைக்கு போக ஆயத்தமாகிறேன். சுவரில் மாட்டியிருந்த என் அம்மாவின் படத்தை வெகுநேரமாய் பார்த்துக் கொண்டிருந்தேன் . நிழலாய் ஓர் உருவம் என் பின்னே நின்றது . திரும்பி பார்த்தேன் . அங்கே காலையுணவு பொதியுடன் நின்றிருந்தாள் சுஸ்மித்தா .

"நீ என்னமோ சொல்லனும் சொன்ன..." என அவளிடமிருந்து அந்த பொதியை வாங்கிக் கொண்டே கேட்க , அவள் வெட்கிச் சிரித்தப்படி தலை குனிந்தாள் . அவள் தாடையை உயர்த்தி கண்களால் என்னவென கேட்டேன்.

"அம்மா வர போறாங்க... " என்றுவிட்டு தன் வயிற்றை மெதுவாக தடவினாள். என்னால் அந்த சந்தோஷத்தை விபரிக்க இயலவில்லை . ஒரு துள்ளலுடன் அவளை அப்படியே தூக்கிக் கொள்ள "விடுங்க விழுந்துட போறன்" என்றாள்.

மெதுவாக அவளை கீழே இறக்கி அவள் நெற்றியை முத்தமிட மீண்டும் திலீபன் சேரிடமிருந்து போன் வந்தது.

"இதோ வந்துக் கொண்டிருக்கிறேன் சேர் " என்றுவிட்டு பையை தூக்கி தோளில் போட்டேன்.

"எதுக்கும் மனசை போட்டு குழப்பிக்காம தைரியமா போயிட்டு வாங்க " என என் தலை முடியை ஒருபக்கமாக படியவாரி விட்டாளவள் . அவளை பிரிய மனமின்றி கடமையுணர்வுடன் வேலைக்கு விரைகிறேன் .

# மகத்தான வாழ்வுக்கு மருத்துவக் குறிப்புகள்




**விஜி ரவி, ஈரோடு**

முகநூல், யூ - ட்யூப் மற்றும் வாட்சப்பில் உலா வரும் மருத்துவக் குறிப்புகள் ஏராளம். காதால் கேட்டது, மனதுக்குத் தோன்றியது என எல்லாவற்றையும் ஆரோக்கிய குறிப்புகள் ஆக்கி சமூக வலைதளங்களில் பலர் உலவ விடுகின்றனர். இலவசமாகக் கிடைக்கின்றதே என இந்தக் குறிப்புகளைப் பயன்படுத்தினால் உடலுக்கு ஏற்படும் கேடுகளுக்கு அளவில்லை. ஆனால் ஒரு தலைசிறந்த மருத்துவரே மருத்துவக் குறிப்புகள் வழங்கினால் எப்படி இருக்கும்? அதிலும் 33 வருட மருத்துவ ஆசிரியராக அனுபவம் உள்ள, 200க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் ஏழு மருத்துவ நூல்களை எழுதியுள்ள பொது மருத்துவ நிபுணர் டாக்டர் தா. ரவிக்குமார் எம்.டி அவர்கள் எழுதிய மகத்தான வாழ்வுக்கு மருத்துவக் குறிப்புகள், ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய அருமையான நூல்.

படிக்கும் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் மிக எளிய நடையில் எழுதப்பட்டிருப்பது இந்த நூலின் சிறப்பு. கண்கள், காதுகள், மூக்கு, பாதம், கழுத்து, கல்லீரல், மண்ணீரல், சிறுகுடல், நுரையீரல், நாக்கு, நகம், உதடுகள் போன்ற உடல் உறுப்புகளில் ஏற்படும் நோய்களுக்கான காரணங்கள் என்ன என்பதைப் பற்றி விளக்கிச் சொல்வதோடு அவை வராமல் தடுக்க என்ன செய்யலாம் என்ற குறிப்புகளையும் கொண்டுள்ளது.

தெளிவான, நகைச்சுவையான நடையில் எழுதப்பட்டிருப்பதால் வாசிக்க மிகவும் இலகுவாக இருக்கிறது. இந்த நூலை வாசித்து முடித்ததும் நமது உடல் உறுப்புகளை எப்படி பத்திரமாக பார்த்துக் கொள்ளலாம் என்பதை பற்றிய ஒரு தெளிவான பார்வை கிடைக்கும்.

சளி, கொரோனா மட்டுமல்ல, தொழு நோய் கூட மூக்கின் வழியாகத்தான் பரவும். நாக்கு நீல நிறத்தில் இருந்தால் அது இதய மற்றும் நுரையீரல் நோயின் அறிகுறியாக இருக்கலாம். தடித்த நாக்கு தைராய்டு குறைபாட்டின் அறிகுறி. துடிக்கும் நாக்கு நரம்புக் கோளாறின் அறிகுறி என்கிற அரிய தகவல்களைக் கொண்டுள்ளது இந்நூல்.

பாத எரிச்சல் ஏன் ஏற்படுகிறது? விட்டமின் பி12 குறைபாடு, ஃபோலேட் குறைபாடு, மதுப்பழக்கத்துக்கு அடிமையானவர்கள், உடலில் ரத்த சர்க்கரை அளவு அதிகமானால் நரம்பு பாதிக்கப்பட்டு பாத எரிச்சல் ஏற்படும் என்பது போன்ற தெரியாத விஷயங்களையும் பற்றி கூறுகிறது.

கைகளுக்கு மலிவான நகச்சாயம் பூசுவதால் ஏற்படும் விளைவுகளை சொல்லிவிட்டு, மருதாணி இலைகளை அரைத்து இயற்கையாக நகங்களை அழகு படுத்தலாம். அரைக்கும் போது சில சொட்டு நீலகிரி தைலம் சேர்த்தால் சளி பிடிக்காது என்பது போன்று டிப்ஸ்களும் இதில் உண்டு.

கணினி மற்றும் லேப்டாப் முன்பு பணி செய்பவர்கள் எப்படி அமர வேண்டும்? கீ போர்டு பயன்படுத்தும்போது கைகளின் நிலை, (பொசிஷன்), வாகனம் ஓட்டும் போது இருக்க வேண்டிய உடல் தோரணை, குழந்தைகளின் புத்தகப்பை எவ்வளவு எடை இருக்க வேண்டும்? அதை முதுகில் எப்படி மாட்ட வேண்டும் என்பது போன்ற நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற பலவிதமான குறிப்புகளை இந்த நூல் கொண்டுள்ளது.

நம் நாட்டில் பாம்புக் கடியால் மரணிப்பவர் பலர். பாம்பு கடித்தால் கடிபட்ட இடத்திலிருந்து விஷம் பரவாமல் இருக்க, கடித்த இடத்தின் மேலே ஒரு துணியில் கட்டுப் போடலாம். தளர்வான நிலையில் கட்டு அமைய வேண்டும். இல்லையென்றால் அது ரத்த ஓட்டத்தை கட்டுப்படுத்தும். பல்லில் எந்த பாதிப்பும் இல்லாமல் வலி எற்பட்டால் அது இதய நோயின் அறிகுறியாக இருக்கலாம். பற்களில் ஏற்படும் கிருமித் தொற்று ரத்த குழாய் வழியே பரவி மாரடைப்பு ஏற்படுத்தலாம் போன்ற பகீர் தகவல்களையும் பற்றி சொல்கிறது. மொத்தத்தில் இந்த நூல் அனைவரும் வாசிக்க வேண்டிய அருமையான நூல் என்பதில் சந்தேகமில்லை.

# விமானப் பயணம்

சுஸ்ரீ





வரவர இந்த ஃபிளைட்லாம் சிடி பஸ் மாதிரி ஆயிடுச்சு.ஸ்டாண்டிங் டிராவல் ஒண்ணுதான் இன்னும் ஆரம்பமாகலை.

மும்பைல ஃபிளைட் பிடிச்சேன் சார் சென்னை வரதுக்கு.கடேசி நிமிஷத்துல கூட டிக்கெட் கிடைச்சது (6500 ரூபா).

விண்டோ இல்லை, அய்ல் இல்லை நடுவாந்தர சீட். கை வச்சுக்க ரெண்டு ஹேண்டிலும் இல்லை. ஒரு பக்கம் சர்தார்ஜீயும், மறு பக்கம் பெங்காலி பாபுவும். அவர்கள் முழங்கையால் என் இடுப்பில் கிச்சு கிச்சு மூட்டிக் கொண்டு அவர்கள் சந்தோஷித்தார்கள்.

ரெண்டு மணிநேர இம்சை, இதுல என்ன கஷ்டம்னா 6.5k கொடுத்து ஒரு காஃபி கூட ஃபிரீயா கொடுக்கலை.இறங்கினவுடனே A to B-ல நல்ல காபி குடிக்கணும்.

விண்டோ சீட் சர்தார்ஜீ ஃபிளைட் பர்சரைக் கூப்டு ஒரு காஃபினு சொன்னான். 250 ரூபா வாங்கிண்டு ஒரு கப்புல வெந்நீரும் காபிபொடி பாக்கெட்டும், பால் பொடி பாக்கெட், சக்கரை பாக்கெட்னு கொடுத்துட்டு வெக்கமில்லாம என்ஜாய்னு வேற சொல்லிட்டுப் போனான்.

பாவம் அந்த குறுகலான இடத்தில் வெந்நீர்ல காபி கலக்க படாத பாடுபட்டு கலந்து, என் தொடைல கொஞ்சம் சக்கரை தூவி, அந்த காபியை அவர் தாடில வடிகட்டி குடிக்கறப்ப என் கழுத்தை கஷ்டப்பட்டு திருப்பி அவன் முகத்தைப் பாத்தேன். அந்த தாடி மீசைக்குள்ளேயும் அவன் விளக்கெண்ணை குடித்த முகத்தைப் பாத்து ரசிக்க முடிந்தது.

இப்படியாகத்தானே விமானம் சென்னையில் தரையிறங்கியது. எல்லோலும் அவசரமாய் ஏதோ பனிஷ்மெண்ட் கொடுத்த மாதிரி எழுந்து நின்றார்கள். ஒரு 20 நிமிஷம் எல்லாரையும் அடென்ஷனில் நிற்க வைத்து கதவை திறந்தார்கள்.

ஏதோ இறங்கிப் போய் பெரிய பெரிய சாதனைகள் செய்யப் போறது போல எல்லாரும் முட்டி மோதிக் கொண்டு இறங்கினார்கள்.

என்னதான் சாதனைனு பாத்தா இறங்கி விமானநிலைய டாய்லட் வாசலில் வரிசை கட்டி நின்றார்கள்.

என்னவோடாப்பா சரவணா இந்த அவசர உலகமே புரியலை.

சரவணன் யாருனு கேக்கறீங்களா, அது எங்க தெரு முனைல தள்ளு வண்டில இட்லி போட்டு விக்கறவர். ஒரு இட்லி 8 ரூவா, சுக்கு காபி 2 ரூவா.

அவரெதுக்கு இங்கேன்னு பாக்குறீங்களா..? யானை விலை விக்கிற விமான நிலையங்களை விடுத்து குறைந்த விலைக்கு கொடுக்கும் இந்த மனிதர்களிடம் மனிதநேயமும் இருக்கிறது என்பதற்காகத்தான்.



# தண்டகாரண்யம்




**பரிவை சே.குமார்**

தண்டகாரண்யம் என்பது அடர்ந்த காட்டுப்பகுதி, தண்டனைக்குரியவர்கள் வசிக்கும் காடே தண்டகாரண்டம் எனப்படும். இந்தப் படத்தில் யார் தண்டனைக்கு உரியவர்கள், ஆனால் யார் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

தமிழ் சினிமா போதை மற்றும் சாதியை மையப்படுத்தியே படங்களை எடுத்து வருவதால் பல படங்களை பார்க்க வேண்டுமா என்ற யோசனை வர ஆரம்பித்துவிட்டது. அப்படித்தான் தண்டகாரண்யத்தையும் கிடப்பில் வைத்திருந்தேன். பின்னர் சரி பார்ப்போம், எப்பவும் போல படம் பயணித்தால் பாதியில் நிறுத்திவிடலாம் என நினைத்தே பார்க்க ஆரம்பித்தேன்.

கதை வித்தியாசமாய் பயணித்தது. இசைஞானியின் கண் சிவந்தால் மண் சிவக்கும் படத்தின் 'மனிதா... மனிதா...', இதயத்தை திருடாதே படத்தின் 'ஓ ப்ரியா... ப்ரியா...' பாடலும் படத்தில் மிகச் சிறப்பாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதுவும் ஓ ப்ரியா... ப்ரியா... சான்ஸே இல்லை, செம.

வன அலுவலகத்தின் வேலை செய்யும் பழங்குடி இனத்து இளைஞனாக கலையரசன், அவரின் அண்ணனாக அட்டக்கத்தி... ரப்பர் பந்து... இல்லையில்லை 'கெத்து' தினேஷ். அண்ணனுக்கும் வனத்துறை அதிகாரிக்கும் உள்ளூர் அரசியல் தலைகளுக்கும் எப்பவும் மோதல் என்பதால், அண்ணன் செய்யும் ஒரு காரியத்தால் தம்பியின் வேலை போவதுடன் அத்தனை வருடம் வேலை பார்த்ததற்கான எந்த அத்தாட்சியும் இல்லாமல் அழிக்கப்பட்டு வாழ்வு சூன்யமாகிறது.

அப்போதுதான் ஜார்க்கண்ட் மாநிலத்தில் மத்திய அரசால் நடத்தப்படும் நக்கல் ஒழிப்பு மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறலாம், இந்த துணை ராணுவ வீரனாகி மாதம் இருபதாயிரம் சம்பாரிக்கலாம் என ஒருவர் சொல்வதைக் கேட்டு, இருந்த ஒரு விவசாய நிலத்தையும் விற்று தம்பியை அனுப்பி வைக்கிறார் தினேஷ். அங்கு செல்லும் தம்பிக்கு என்ன ஆகிறது..? ஊரில் இருக்கும் அண்ணன் என்னவாகிறார் என்பதைத்தான் பேசுகிறது இந்தப்படம்.

பயிற்சிக்குச் செல்லுமிடத்தில் நக்கச்சல்கள் சரணடைந்ததாய் சொல்லி, போட்டோ எடுத்து அதை நாடெங்கும் பத்திரிக்கைகள் வாயிலாக பரப்பித்தான் பயிற்சிக்கு எடுத்துக் கொள்கிறார்கள் அல்லது கொல்கிறார்கள் என்றும் சொல்லலாம். ஆம் நாம் வீரப்பன் வேட்டையில் சரணடைந்தவர்கள்... சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் என அப்பாவிகளின் போட்டோக்களைப் போட்டு அரசியல் செய்ததைப் போல் இதில் நக்சலைட்டுகள் எனச் சொல்லி, அப்பாவி ஏழைகளைக் காவு வாங்குகிறார்கள்.

வீரப்பன் வேட்டையை நினைக்கும் போது வழக்கறிஞர் ச.பாலமுருகனின் சோளகர்தொட்டி நாவல் ஞாபகத்தில் வருகிறது. அதை வாசித்தபின் பல நாட்கள் மனதை என்னவோ செய்தது. காவல்துறை அவ்வளவு அட்டகாசம் செய்திருக்கும். அந்த நாவலை நாம் கொண்டாட அல்லது கொண்டு சேர்க்க தவறிவிட்டோம் என்பதுதான் உண்மை.

பயணித்து ஜார்கண்ட் பயிற்சி முகாம் என நகர்கிறது. முகாமில் நடக்கும் கொடுமைகள், கொடுக்கப்படும் தண்டனைகள் என எல்லாவற்றையும் தத்ரூபமாகப் படமாக்கியிருக்கிறார்கள். கலையரசன் மிகச் சிறந்த நடிகர் என்பதால் பல இடங்களில் அடித்து ஆடியிருக்கிறார், சில இடங்களில் சோடை போய்விட்டார்.

தினேஷ் போராளியாக வருகிறார். படத்தில் பலரைக் கொல்கிறார். தம்பியை இந்திய ராணுவ அதிகாரியாகப் பார்க்க ஆசைப்படுகிறார். முடிவில் தமிழகத்தில் இருந்து ஜார்கண்ட் வரை போகும் நக்சலாக மாறிப் போகிறார். லப்பர் பந்து கெத்து காட்டிய கெத்தில் பாதிகூட இதில் இல்லை என்பதே உண்மை.

நக்சல்கள் எனச் சொல்லி பயிற்சிக்குப் போனதால் அவர்களின் குடும்பங்கள் படும் இன்னலைச் சொல்லியிருப்பது சிறப்பு. அதிலும் கலையரசனின் அப்பாவாக நடித்தவர் அடிபடும் போதும் மிதிபடும் போதும் மனசு வலிக்கிறது. அதேபோல்தான் பயிற்சி முகாமில் ஆரம்பத்தில் கலையரசனுடன் மோதி, பின் நட்பாகி, தனது குடும்பத்தின் தற்போதைய நிலையைச் சொல்லி, மகளை நினைத்து உருகும் ஷபீரின் முடிவும் மனதைக் கனக்க வைக்கிறது. முகாமில் கலையரசனைவிட ஷபீர் கல்லரக்கல் அடித்து ஆடியிருக்கிறார்.

தினேஷின் மனைவியாக வரும் ரித்விகாவுக்கு அவ்வளவாக வேலை இல்லை, தினேசுக்கே அப்படித்தான். கலையரசனின் காதலியாக வரும் வின்சு சாம் தனது கதாபாத்திரத்துக்கு சிறப்பு செய்திருக்கிறார். பால சரவணன் கேம்பில் கலையரசனுக்கு நட்பாகிறார். இவரின் செயல்கள் சிரிப்பை எல்லாம் வரவைத்து விடவில்லை, இறுதியில் புலம்புவதும், கதறுவதும் சிறப்பு.

படத்தில் இப்படி ஒரு முகாம் இருப்பதே வெளியில் தெரியாமலேயே இருப்பது போல் சொல்வது, பழங்குடி இனத்து மக்கள் தவிர படத்தில் வரும் மற்ற எல்லாருமே வில்லன்கள் எனக் காட்டுவது, ஜார்கண்ட் போய் தினேஷ் பலி தீர்ப்பது, ஆரம்பத்தில் இந்தியில் பேசும் ஷபீர் பாதிப் படத்தில் தமிழில் பேச ஆரம்பிப்பது என சிலவற்றை ஏற்றுக் கொள்ள முடியாதுதான் என்றாலும் வீரப்பன் வேட்டையில் இருந்த உண்மையை நாம் அறிந்திருப்பதால் இப்படித்தான் நக்சல்கள் என்ற போர்வையில் அப்பாவிகளைக் கொல்கிறார்கள் என்பதை உணர முடிகிறது.

போதை, மாஸ் என வானவேடிக்கை நிகழ்த்தாமல் சாதி, பாதிப்பு என திருவிழா நடத்தாமல் ஒரு கதையை - அதுவும் உண்மையில் நிகழ்ந்ததாம் - படமாக்கிய இயக்குநர் அதியன் ஆதிரைக்கு வாழ்த்துகள்.

பிரதீப்பின் ஒளிப்பதிவு அருமை, அதுவும் காடு சம்பந்தப்பட்ட காட்சிகள் வெகு சிறப்பு. ஜஸ்டின் பிரபாகரனின் இசை, குறிப்பாக பின்னணி இசை படத்துக்குப் பெரும் பலம். செல்வா ஆர்.கேயின் படத்தொகுப்பு சிறப்பு. நீலம் புரடெக்சனுக்காக பா.ரஞ்சித், சாய் தேவானந், சாய் வெங்கடேஸ்வரன் ஆகியோர் தயாரித்திருக்கிறார்கள்.

இராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்காக உழைக்க நினைத்தவனுக்கு கொடுமையான முடிவையும், ஊரில் தன் மக்களுக்காக குரல் கொடுத்தவனை நக்சலாகவும் ஆக்கிப் பார்க்கிறது காலம். அரசு நினைத்தால் எதையும் செய்யும் என்பதை வடநாட்டு அரசியல்வாதிகள், இராணுவ அதிகாரிகள் எனக் கதை சொல்லியிருக்கிறாரகள்.

தண்டகாரண்யம் ஒருமுறை பார்க்கலாம்.



GALAXY BOOK
SELLERS & PUBLISHERS

# புதிய புத்தகம்,
# புதிய சிந்தனை



**_MORE THAN JUST A BOOK SHOP_**

புத்தகங்கள் வாங்க
கேலக்ஸி
வாட்ஸாப்
எண்ணில் தொடர்பு
கொள்ளவும்.
+91 99944 34432